விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: எட்டு

Valampurii

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 30 சனிக்கிழமை (13.05.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 145

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

# கண்காணிப்புக் குழுவின் அறிக்கைக்கு விடுதலைப்புலிகள் கடும் கண்டனம்

## அவசரமாக அழைத்து நேற்றுப் பேச்சு



(கிளிநொச்சி)

**விடுதலைப்புலிகள் வான் மற்றும் கடல் வழிகளை பயன்படுத்துவதற்கு எந்தவித உரிமைகளும் இல்லையென இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வெளியிட்ட அறிக்கைக்கு விடுதலைப்புலிகள் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர். இது குறித்து நேற்று கண்காணிப்புக்குழுத்தலைவர் உல்ப் ஹென்றிக்சனை அவசரமாக கிளிநொச்சிக்கு அழைத்த விடுதலைப்புலிகள் தமது கண்டனத்தையும் அதிருப்தியையும் நேரில் வெளியிட்டனர்.**

கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை நடுவப்பணியகத்தில் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சனை நேற்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சந்தித்துப் பேசினார்.

இச் சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினால் மே 11 ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பாக கண்காணிப்புக்குழுத் தலைவரை அழைத்து எமது தலைமைப் பீடத்தின் மிக கடுமையான அதிருப்தியையும் கண்டனத்தையும் தெரிவித்திருக்கின்றோம்.

கண்காணிப்புக்குழுவினர் நேற்று முன்தினம் எங்கள். கட்டுப்பாட்டிற்குட்பட்ட கடல் பிராந்தியம் மற்றும் வான்பரப்பு எங்களுக்கு உரித்து இல்லை என்ற அறிக்கையை வெளியிட்டிருந்தனர்.

இப்படியான அறிக்கையை வெளியிடுவதற்கு கண்காணிப்புக்குழுவிற்கு எந்த ஒரு அதிகாரமும் இல்லை.

அமைதிமுயற்சி மற்றும் சமாதான முயற்சிகள் அனைத்துமே இரு சமதரப்பு என்ற அடிப்படையில் இரண்டு தரப்பினரது படைவலுச்சமநிலை என்ற அடிப்படையில் தான் யுத்த நிறுத்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது.

அதைத்தொடர்ந்துதான் அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

*பக்கசார்பான அறிக்கை*

எங்களை ஒரு அரசசார்பற்ற சக்தியாகப் பார்ப்பதற்கு இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தம் உருவாக்கப்படவில்லை. இராணுவமும் அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளோடு இராணுவ ரீதியாக வெற்றி கொள்ளமுடியாது என்ற யதார்த்தத்தின் அடிப்படையில் இவர்கள் அமைதிப் (08 ஆம் பக்கம் பார்க்க)

## கலட்டியில் வைத்து 6 இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

கலட்டிச் சந்தியில் வைத்து இரு இளைஞர்கள் இராணுவத்தினரால் நேற்று முன்தினம் மாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

உணவகம் ஒன்றின் முன்னால் இவர்கள் நின்றிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இராணுவத்தினர் அவர்களை கைது செய்து பவள் ஒன்றில் ஏற்றிச் சென்றதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த சிறிகரன் ராஜராஜன் ,சாவகச்சேரியைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் குருபரன் (வயது 24) ஆகிய இருவருமே இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக நீதிமன்றில் முறையிடப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரையும் கைதுசெய்த இராணுவத்தினர் மின் கம்பம் ஒன்றில் கட்டி வைத்து விட்டு சில மணிநேரத்தின் பின் அழைத்துச் சென்றதாக கூறப்பட்டுள்ளது.

எனினும் இவர்கள் இருவரையும் தாம் கைதுசெய்யவில்லை என இராணுவத்தரப்பு தெரிவித்ததாகவும் அவர்களை மீட்பதற்கு உதவுமாறும் அவர்களது பெற்றோர் மனித உரிமைகள் ஆணைக்குழு,போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு,செஞ்சிலுவைச் சங்கம், யு.என்.எச்.சி.ஆர். மற்றும் சுரேஸ்பிரேமச்சந்திரன் எம்.பி.ஆகியோரிடம் முறையிட்டுள்ளனர். இதேவேளை மேலும் நால்வர் நேற்றுக் காலை இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (து-15,132,133)

## மூதூரில் தமிழ் மாணவன் நேற்று சுட்டுக் கொலை

(மூதூர்)

மூதூர் நகரம் தேவாலய வீதியில் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் நேற்று காலை 8.45 மணியளவில் அவரின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி விட்டுத் தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இத் துப்பாக்கிச் சூட்டில் மற்றொரு மாணவர் படுகாயமடைந்த நிலையில் மூதூர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த பாலகுமார் (வயது 17) என்ற தமிழ் மாணவனே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். படுகொலை செய்யப்பட்ட மாணவன் பாலகுமார் திருகோணமலை நகரில் உள்ள பாடசாலையில் படித்துக்கொண்டிருந்தவர் என்றும் வார விடுமுறைக்காக மூதூர் வந்திருந்தார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கட்டைபறிச்சானில் நேற்று முன்தினம் சுரேந்திரன் என்ற சூரியா (வயது 22) என்பவர் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். (ச-05)

## அச்சுவேலியில் நேற்று ஒருவர் சுட்டுக்கொலை

(அச்சுவேலி)

அச்சுவேலியில் சிகை அலங்கரிப்பு கடை உரிமையாளர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அச்சுவேலி வடக்கில் தம்பாலைச் சந்தியில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளரான ஞானம் (வயது 45) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

அவர் நேற்றுக் காலை 8 மணியளவில் தனது கடையைத் திறந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர் துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ச-05,15,132,133)

## துருப்புக்காவி மீது தாக்குதல் அரசாங்கம் கண்டனம்

(கொழும்பு)

வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கடல் மோதல்கள் குறித்து அரசாங்கம் நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது; அரசாங்கத்தின் துருப்புக்காவிக் கப்பல் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலை அரசாங்கம் கண்டிக்கிறது.

இந்த தாக்குதலையடுத்து மீண்டும் தம் மீது தாக்குதலை புலிகள் மேற்கொள்ளாமல் தடுப்பதற்காகவே விமானப்படை மட்டுப்படுத்திய தாக்குதல் ஒன்றை நடத்தியது.

வன்னிப்பிரதேசத்தில் இரணை மடுப் பகுதியில் சட்டவிரோதமாக கட்டப்பட்டு வருவதாக கூறப்படும் விமான ஓடுபாதை மீது மாத்திரம் இத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அதில் கூறப்பட்டது.

இந்த சட்டவிரோதமான ஓடுபாதை இலங்கைக்கு மாத்திரமல்லாமல் பிராந்தியளவில் தோற்றுவிக்கக்கூடிய பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து பல தடவை சர்வதேச சமூகத்திடம் அரசு முன்வைத்ததாகவும் அந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் இந்த இடத்தைப் பார்வையிடுவதற்கு பல தடவைகள் முயற்சி எடுத்தும் விடுதலைப்புலிகள் அதற்கு மறுத்துள்ளனர்.

இவ் அனுமதி மறுப்பே யுத்தநிறுத்த மீறல் என கண்காணிப்புக்குழு தெளிவுபடுத்தியதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்த (08 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு வாரத்தைத் தாண்டியது பணிப்புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மக்கள் மீது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் அராஜகங்களைக் கண்டித்து அரச ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிப்புறக்கணிப்பு நேற்று 7 ஆவது நாளைத் தாண்டியது.

கடந்த சனிக்கிழமை முதல் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிப்புறக்கணிப்பினால் யாழ்.குடாநாட்டில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அரச வங்கிகள் ,செயலகம்,பிரதேச செயலகம்,பிரதேச சபை என்பன இயங்கவில்லை. தனியார் (08 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையின் 7 சடலங்கள் வெற்றிலைக்கேணியில் மீட்பு

வெற்றிலைக் கேணிக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலின் போது கொல்லப்பட்ட 7 பேரின் சடலங்களை மீட்டிருப்பதாக இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த சடலங்களில் ஒரு சடலம் கடற்படை வீரா உடையது என அடையாளம் காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடலிற்கு அடியில் மூழ்கிய நிலையில் விடுதலைப்புலிகளின் நான்கு படகுகளை மீட்டிருப்பதாகவும் தொடர்ந்தும் தேடுதல் பணியில் கடற்படையின் சுழியோடிகள் ஈடுபட்டிருப்பதாகவும் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார். (ச-05)

# அகந்தை ஒழிந்தது ஆணவம் அழிந்தது



'சடசடெனச் சரிந்ததடா ஜாரின் ஆட்சி' எனப் பாரதி பாடிய பாடலின் கருத்தை தமிழக சட்டசபைத் தேர்தல் முடிவுகள் வெளிவரத் தொடங்கியபோதுதான் பிரத்தியட்சமாகக் காணக்கூடியதாக இருந்தது.

200 ஆசனங்களுக்கு மேல் ஜெயலலிதாவின் தலைமையிலான அ.தி.மு.க கூட்டணி கைப்பற்றும் என வீதிக்கு, வீதி மூலைக்கு மூலை முழக்கமிட்டு வந்த கலிங்கப்பட்டியாரின் கனவு பொய்யாய், பழங்கதையாய் போனதை கண்ணாற்காணக் கூடியதாக இருந்தது.

பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 18 மாத காலம் காராக்கிரகத்திலே கம்பி எண்ணும் நிலையை ஏற்படுத்திய ஜெயலலிதா அம்மையாரின் ஆட்சியை தூக்கி எறிவதே என் தலையாய பணி என்று பட்டி தொட்டியெங்கும் பெருங்குரல் எழுப்பி வந்த வைகோ, கேட்பார் சொல் கேட்டோ அல்லது பெட்டிகள் எழுப்பிய ஓசைக்கு மயங்கியோ 'ஐயப்பா சரணம்' என்பது போல 'அம்மையே சரணம்' என ஜெயலலிதாவின் காலிலே சரணாகதி அடைந்த பின் தி.மு.கவை தூற்றுவதையே தலையாய பணியாகக் கொண்டு கருணாநிதியைப் பற்றி தனிப்பட்ட முறையில் வசைமாரி பொழிந்து அல்லிராணியின் உள்ளத்தைப் பல வழிகளிலும் குளிரச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வந்தாலும் மக்கள் தாங்கள் நினைத்ததை வாக்குச் சீட்டின் மூலம் காட்டி விட்டார்கள்.

அரசியல் நாகரிகம் என்பதை அறவே மறந்து தனிப்பட்ட முறையில் கருணாநிதியையும் அவர் குடும்பத்தினரையும் பற்றி நரம்பில்லாத நாக்கால் வசை மொழிகளை அள்ளி வீசி அம்மையாரின் மனதைக் குளிரப்பண்ணும் முயற்சியில் ஈடுபட்டிருந்த வைகோவுக்கு தகுந்த பாடம் புகட்டும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த மக்கள் அதனைச் செயலில் காட்டி விட்டார்கள்.

இந்தியா சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து பல ஆண்டுகாலம் தமிழகத்தைத் தன் பிடியில் வைத்திருந்த காங்கிரஸ் ஆட்சிக்கு சமாதி கட்டியவர் அறிஞர் அண்ணா. பெருந்தலைவர் காமராஜர் ஒரு சாமான்ய தி.மு.க வேட்பாளரிடம்

## ஆதவன் உதித்துவிட்டான்!

தோல்வியடைந்து விட்டாரென்ற செய்தி கேட்டதுமே மற்றைய தலைவர்களானால் வெற்றியால் பூரித்துப் போயிருப்பார்கள். காமராஜரின் தோல்வி அண்ணாவுக்கு பெரும் அதிர்ச்சி. இந்த அதிர்ச்சியை அவர் வெளிப்படையாகவே சொல்லியிருக்கிறார். இருந்தும் இறுதிவரை காமராஜரைப் பற்றி அண்ணாவோ அண்ணாவைப் பற்றி காமராஜரோ தனிப்பட்ட தாக்குதல் எதையும் தொடுத்தது கிடையாது. அரசியலிலே கண்ணியம் காத்த தலைவர்கள் அவர்கள். ஆனால் ஒரு கட்சியைச் சார்ந்திருக்கும் போது அக்கட்சியைப் பற்றியும் அதன் தலைவர்கள் பற்றியும் வானளாவப் புகழ்வதும் மாற்றுக் கட்சிக்குத் தாவியதும் மண்வாரித் தூற்றுவதும் இன்றைய அரசியலில் சர்வ சாதாரணமாகி விட்டது.

இந்த வகையில் முன்னணியில் திகழ்ந்தவர் வை.கோ. லோக் சபையிலே நான் இதைத்தான் கூறினேன் எனத் தனது பாராளு மன்றப் பேச்சை தமிழ்நாட்டு அரசியல் மேடையிலே கூறிய வை.கோ, புலிகளுக்கு ஆதரவாகப் பேசிவிட்டாரென்று அவரை நாயைத் துரத்துவது போல் துரத்தி பொடா சட்டத்தின் கீழ் கைதுசெய்து 18 மாத காலம் சிறையில் அடைத்து சித்திரவதை செய்தவர் ஜெயலலிதா. ஓரிரண்டு ஆசனப் பிரச்சினையைப் பூதாகாரமாக்கி 35 ஆசனம் என்றதும் அவரது காலிலே விழுந்தது மாத்திரமல்ல; அநாகரிகமான வார்த்தைப் பிரயோகத்தால் தி.மு.க வையும் அதன் தலைவர் கருணாநிதியையும் அவதூறாகப் பிரசாரம் செய்ய முற்பட்டதன் மூலம் ஜெயலலிதாவின் மனதை



யும் குளிரவைக்க முற்பட்டார்.

'கோபுரம் தாங்கிப் பூதம் போல' நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க கூட்டணிக்குக் கிடைத்த வெற்றிக்குத் தானே காரணம் எனத் தப்புக் கணக்குப்போட்ட வைகோ, தானில்லாவிட்டால் தி.மு.கவின் கதி அதோ கதிதான் என எண்ணிவிட்டார்.

வை.கோ தி.மு.க அணியிலிருந்து ஜெயலலிதா அணிக்கு மாறிவிட்டார் என்ற செய்தி வெளிவந்ததும் ஆரம்பத்தில் சிறிது சலசலப்பு ஏற்பட்டாலும் நாளடைவில் அது மறைந்துவிட்டது. வைகோவை அடுத்து சரத்குமார், ராதிகா முதலிய நடிகர்கள் விலகியபோதிலும் தி.மு.க கூட்டணி அசையவில்லை; அயரவில்லை.

தி.மு.கவின் அடுத்த தலைவர் யார் என்பதே வைகோவின் ஆயுதமாக இருந்தது. ஒரு கட்சி, அதன் நிர்வாகிகள், தொண்டர்கள் யாரை வேண்டுமானாலும் தலைவராகத் தெரிந்தெடுக்கலாம் என்ற அடிப்படை அரசியல் தத்துவம் தெரியாத காரணத்தால் கருணாநிதியின் மகன் ஸ்டாலின்தான் அடுத்த தலைவர், அடுத்த முதல்வர் என்று கரடியாய் கத்தினார். அவரின் காட்டுக் கூச்சலுக்கு மக்கள் கூட்டம் மசியவில்லை. எமக்கே வெற்றி என இறுமாந்திருந்த வைகோ குழுவினருக்கு வாக்குச் சீட்டு மூலம் வேட்டு வைத்துவிட்டார்கள்.

மானம், மரியாதை, கௌரவம், அந்தஸ்து அத்தனையையும் இழந்த நிலையில் இன்று அவரது எதிர்கால அரசியலே கேள்விக் குறியாகி விட்டது. 25 ஆசனம் கேட்டு 22 ஆசனங்கள் தருவதாக ஒப்புக்கொண்டதை உதறித்தள்ளி விட்டு 35 ஆசனங்களுக்காக கட்சி மாறிய அவரது கட்சிக்கு இன்று கிடைத்த ஆசனங்கள் ஆறு மாத்திரமே. தி.மு.க அணியில் இருந்திருந்தால் 22 ஆசனங்களிலுமே



வெற்றிபெறும் வாய்ப்புக் கூட கிடைத்திருக்கும்.

'எண்ணிய எண்ணம் எங்கே?
இலக்கண குமாரன் எங்கே?
கன்னனும் தேரும் எங்கே?
கரைகொளாச் சேனை எங்கே?
என்னுடை தம்பி எங்கே?'

எனத் துரியோதனன் புலம்பிய விதத்திலேதான் இப்பொழுது புலம்பும் நிலை வைகோவுக்கு ஏற்பட்டிருப்பது பரிதாபம்!

அண்ணாவின் தலைமையில் முதன் முதலில் தி.மு.க தமிழக ஆட்சியைக் கைப்பற்றியதும் அண்ணாவுக்கு இருந்த ஒரு கவலை எங்களை நம்பி வாக்களித்த மக்களுக்கு என்ன செய்யப்போகிறே[ாம்] என்பதுதான். தேர்தல் காலத்தில வாக்குறுதிகளை அள்ளி வீசுவதும் வெற்றி பெற்றதும் அவற்றை மறந்து விடுவதும் இன்று அரசியல் நாகரிகமாகிவிட்டது. தி.மு.க அணியின் வாக்குறுதிகளை கருணாநிதியின் நாணயத்தை நம்பித்தான் மக்கள் அவரது அணிக்கு வாக்களித்திருக்கிறார்கள் என்பதை மறந்து விடாமல் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி தமிழகத்தில் ஒரு பொற்காலத்தை கருணாநிதி ஏற்படுத்துவாரேயானால் அவரது பெயர் மக்கள் மனதில் என்றென்றும் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

**ராஜ்**

# கூட்டணி ஆட்சியா? தனிக்கட்சி ஆட்சியா?
# கலைஞர் கருணாநிதியின் சிறப்புச் செவ்வி

(சென்னை)

தமிழகத்தில் கூட்டணி ஆட்சி அமைப்பது குறித்து கூட்டணி கட்சிகளுடன் பேசி முடிவெடுக்கப்படும் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவித்தார். தேர்தல் முடிவுகள் வெளியான நிலையில் தி.மு.க தலைவர் கருணாநிதி செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த போது;

பத்திரிகையாளர்களையும், செய்தியாளர்களையும் அடிக்கடி சந்திக்கிற வாய்ப்பை பெற்றிருந்தாலும், ஐந்தாண்டுகளுக்கு பிறகு சந்தோஷமான நேரத்தில் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நடைபெற்று முடிந்த தமிழக சட்டசபைத் தேர்தலில் தி.மு.க தலைமையிலான ஜனநாயக முற்போக்கு கூட்டணி மாபெரும் வெற்றி பெற்றிருக்கிறது. இந்த தேர்தலில் வீசிய பணப்புயலில் எங்களது கூட்டணிப் படகு இவ்வளவு தூரம் தான் பயணத்தை நடத்த முடிந்தது. வெற்றிப்படகுக்கு பாய்மரமாக, துடுப்பாக இருந்த வாக்காளர்களுக்கும், பொதுமக்களுக்கும் நன்றி. இந்த பொதுத்தேர்தலில் ஒத்துழைத்த தோழமை கட்சிகள் அனைத்திற்கும், சரியான பாதை காட்டிய கூட்டணி கட்சி தலைவர்களுக்கும், வெற்றிக்காக பாடுபட்ட தொண்டர்களுக்கும் வெற்றியை காணிக்கையாக்கி மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவிக்கிறேன் எனக் கூறினார்.

தொடர்ந்து செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த கருணாநிதி கூறியதாவது;

கேள்வி: பதவியேற்பு எப்போது?

பதில்: கூட்டணி கட்சி தலைவர்களுடன் கலந்துபேசி உறுதி செய்வோம்.

கேள்வி: தமிழகத்தில் முதல் முறையாக கூட்டணி ஆட்சி ஏற்படுமா?

பதில்: அந்தப் பெருமையும் இந்தக் கூட்டணிக்குத்தான் கிடைத்திருக்கிறது.

கேள்வி: முதல்வராக இருந்தவர் இறுதிப்போர் என்று கூறினார். தோற்றவர்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?

பதில்: ஏற்கனவே 5 – 6 தேர்தல் பொதுக்கூட்டங்களில் கூறியிருக்கிறேன். தி.மு.க ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட ஏழை பெண்கள் திருமண உதவி திட்டத்தில் அப்போது 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. அதை அ.தி.மு.க ஆட்சியில் ரத்துச் செய்தனர். இப்போது தேர்தல் அறிக்கையில், அ.தி.மு.க ஆட்சியில் நிறுத்தப்பட்ட திருமண உதவித் திட்டத்தை தொடர்ந்து வழங்குவோம் என்றும், முன்பு அளித்த 10 ஆயிரம் ரூபாய் 15 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்று தெரிவித்திருக்கிறோம். அ.தி.மு.க பொதுச்செயலர் ஜெயலலிதா திருமணத்திற்கு நான்கு கிராம் தங்கம் தாலிக்கு வழங்கப்படும் என்று கூறியுள்ளார். அதை நான் தடுக்கவும் இல்லை மறுக்கவும் இல்லை. நாங்கள் ஆட்சியில் ரூபா 15ஆயிரம் வழங்கி திருமணத்தை நடத்துகிறோம். அ.தி.மு.கவினர் கலந்துகொண்டு நான்கு கிராம் தங்கம் அளிக்கட்டும். வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு வளர்ந்துள்ள காழ்ப்பும் மாச்சரியங்களும் நீங்கட்டும் என்று சொல்லியிருக்கிறேன். அதை அவர்கள் தீர யோசித்துப் பார்த்து கடைப்பிடிக்க முன்வர வேண்டும். அதிலிருந்து நாங்கள் எதிர்க்கட்சியை எப்படி நடத்துவோம் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

கேள்வி: தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்கள் படிப்படியாக நிறைவேற்றப்படுமா? அவகாசம் எடுத்துக்கொள்வீர்களா?

பதில்: படிப்படியாக நிறைவேற்றப்படும்.

கேள்வி: அ.தி.மு.க ஆட்சியில் உள்ள ஊழல் குற்றச்சாட்டுகள் மீது நடவடிக்கை எடுப்பீர்களா?

பதில்: சட்டத்தின் படி ஆட்சி நடத்துவோம் என்று கூறியிருக்கிறேன். திட்டமிட்டு பழிவாங்கும் போக்கு எங்கள் ஆட்சியில் இருக்காது.

கேள்வி: இந்தத் தேர்தல் வெற்றியின் முக்கியத்துவமாக எதைக் குறிப்பிடுவீர்கள்?

பதில்: அல்லவை அகல வேண்டும். நல்லவை கிடைக்கவேண்டும் என்று தமிழக மக்கள் விரும்பியதை இந்த முடிவு காட்டுகிறது.

கேள்வி: தி.மு.கவிற்கு தனிப் பெரும்பான்மை கிடைக்கவில்லையே எப்படி ஆட்சி நடத்துவீர்கள்?

பதில்: நடத்திக் காட்டுகிறோம். அப்போது தெரிந்துகொள்ளுங்கள்.

கேள்வி: ராமதாஸ் மற்றும் அன்புமணி மீது போடப்பட்டுள்ள வழக்கு திரும்பப் பெறப்படுமா?

பதில்: கவர்னரிடம் முறையிட்டிருக்கிறோம். அவர் என்ன செய்கிறார் என்பதை பார்த்த பிறகு முடிவெடுப்போம்.

கேள்வி: வைகோ 234 தொகுதிகளிலும் கூட்டணி வெற்றி பெறும் என்று பேசியுள்ளாரே?

பதில்: அவர் கூறுவதற்கெல்லாம் என்னால் என்ன பதில் சொல்ல முடியும்.

கேள்வி: கண்ணகி சிலை மீண்டும் நிறுவப்படுமா?

பதில்: கற்புக்கரசியின் சிலை எங்கேயோ உடைந்து நொருங்கி அருங்காட்சியகத்தில் கிடப்பதை தமிழனால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எவ்வளவு விரைவில் அதைச் சீர்செய்து அதே இடத்தில் நிறுவ முடியுமோ அங்கே நிறுவப்படும்.

கேள்வி: ஆட்சியில் எதற்கு முக்கியத்துவம் வழங்கப்படும்?

பதில்: தி.மு.க ஆட்சியில் குடிசை



மாற்று வாரிய வீடுகள் அறிமுகப்படுத்தப்பட்டு கோட்டூர்புரம், நொச்சிக்குப்பம் போன்ற பகுதிகளில் வீடுகள் கட்டி 35 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. அவைகள் இப்போது சிதிலமடைந்திருக்கின்றன. முதல் முக்கியத்துவமாக சென்னையிலும் மற்ற மாவட்டங்களிலும் சிதிலமடைந்துள்ள குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் புதுப்பிக்கும் பணியை எடுத்துக்கொள்வோம்.

கேள்வி: ஆலோசனைக் கூட்டங்கள் அவ்வப்போது நடைபெறும[ா]?

பதில்: எங்கள் ஆட்சியில் எல்லா பிரச்சினைகளிலும் ஆலோசனை பெற்றுத்தான் அதன்படி நடந்திருக்கிறோம். இடையிலே தொய்வு ஏற்பட்டிருந்தாலும் மீண்டும் அது தொடரும்.

கேள்வி: பெற்றோல், டீசல் விலை உயர்வு குறித்து உங்கள் கருத்து?

பதில்: உங்கள் கருத்துதான் என் கருத்தும். (க)

# ஜெனீவா பேச்சுக்களுடன் 4ஆம் கட்டப் போர் ஆரம்பமாகிவிட்டது என்கிறார் கேணல் வேலவன்

(கிளிநொச்சி)

ஜெனீவாப் பேச்சுக்களுடன் நான்காம் கட்ட ஈழப்போர் அரசால் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது என்று வவுனியா மாவட்ட கட்டளைத் தளபதி லெப்.கேணல் வேலவன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் நடைபெற்ற சமகால அரசியல் கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

நான்காம் கட்ட ஈழப்போர் இப்போது நடைபெற்றுக்கொண்டிருகின்றது. இறுதியாக நடைபெற்ற பேச்சுக்களுடன் அது அரசால் வெளிப்படையாகவே ஆரம்பிக்கப்பட்டு விட்டது. அதனை உணர்ந்துகொள்ளாது சமாதானம் பற்றிய மாயையில் தமிழ் மக்கள் எவரும் வாழமுடியாது. அவ்வாறு எம்மை வைத்திருப்பதற்கு உலகில் எவரும் முயற்சிக்கவும் கூடாது.

நாம் எமது கடந்தகால அனுபவங்களைக் கொண்டு பெருஞ்சமர் ஒன்றுதான் போர் ஒன்று ஆரம்பித்து விட்டது என்ற செய்தியைக் கொண்டுவரும் என்று காத்திருக்கின்றோம். ஆனால் தற்போதைய கள யதார்த்தம் அவ்வாறு இல்லை. ஒரு யுத்தம் எப்போதும் பெருஞ்சமர்களுடன்தான் ஆரம்பிக்கும் என்று எந்த விதிகளும் இல்லை.

கடைசியாக நடைபெற்ற ஜெனீவாப் பேச்சுக்களின் பின் அரசு வெளிப்படையாகவே எம் மீது தாக்குதல்களை நடத்தத் தொடங்கிவிட்டது. ஆரம்பத்தில் ஒட்டுப்படைகளின் மறைப்பில் இருந்த அரசு இப்போது வெளிப்படையாகவே இயங்கத் தொடங்கிவிட்டது. எனவே போர் நிறுத்தம் இப்போதும் சரியாக அமுலில் இருக்கின்றது என்று கூறிவிட முடியாது.

யுத்த நிறுத்தம் என்பது ஈழப்போர் முடியும் வரை அப்படியேதான் இருக்கப் போகின்றது. ஆனால் அது இருக்கும்போதே தாக்குதல்கள் நடக்கும். சண்டைகள் நடக்கும். சமர்களும் நடக்கும். இதுதான் நான்காம் கட்ட ஈழப்போர் ஆகும்.

திருமலையில் சிங்களப் படைகள் எம் மீது வெளிப்படையாகவே தாக்கின. அதனை மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கை என அரசு உரிமை கோரியது. அதனை ஏற்றுக்கொண்ட அல்லது சகித்துக்கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையால் ஒரு பெரும் சமரைத் தொடக்கி ஏதாவது ஒரு தரப்பின் கைகளிலுள்ள பகுதியைக் கைப்பற்றி கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதை சகித்துக்கொள்ள முடியாது என்று தெளிவாகக் கூறமுடியாது.

எமது மக்கள் இன்று எல்லா இடங்களிலும் மோசமாகப் படுகொலை செய்யப்படுகின்றார்கள். இதனை நாம் வெறுமனே பார்த்திருந்தால் இந்நிலை பேரழிவு நோக்கிச் செல்லும். எதற்கும் நாம் முதலில் எம்மிடம் தவறுகளுக்கான காரணங்களைத் தேடுவோம்.

இன்று நாம் சந்திக்கும் அழிவுகளுக்கும் ஒருவகையில் நாம் எல்லோரும்தான் காரணம். ஏனெனில் இந்த இறுதி யுத்தத்தில் உணர்ச்சிகளுக்கு இடமில்லை. முழுத் தயார் நிலையில்தான் இந்த இறுதி யுத்தத்தை நாம் எதிர்கொள்ள வேண்டும். எமது அவலத்திற்குத் தீர்வுகாண எமக்கு எவரது உதவியும் தேவையில்லை. நாமே நமது மீட்பர்கள் என்றார். (க)

## கலந்துரையாடல்

இரவுநேரங்களில் அம்புலன்ஸ் சேவை நடத்துவது குறித்து அம்புலன்ஸ் வைத்திருக்கும் நிறுவனங்களின் தலைவர்கள் ஒன்றுகூடிக் கலந்துரையாடவுள்ளார்கள்.

இக் கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க காரியாலயத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் இரவு நேரம், ஊரடங்கு நேரம் ஆகிய காலகட்டத்தில் அம்புலன்ஸ் சேவை நடாத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் பற்றியும் அதற்கான உத்தரவைப் பெற்றுக் கொள்வதற்கான வழிவகை குறித்தும் ஆராயப்படும். (க)

## அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் இன்று காலை 9.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

கோப்பாய் கோட்டம் தவிர்ந்த யாழ்ப்பாணம், தீவகம், தென்மராட்சி வலயங்களில் நிறுவப்பட்டுள்ள இணைப்பு நிலையங்களிலும் பரீட்சை நிலையங்களிலும் பரீட்சைக் கடமைகளில் ஈடுபடவுள்ள இணைப்பு அலுவலர்கள், உதவி இணைப்பு அலுவலர்கள், பரீட்சை மேற்பார்வையாளர்கள், உதவிப் பரீட்சை மேற்பார்வையாளர்கள் ஆகியோர் தவறாது இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் கேட்டுள்ளார். (க)

## மணவாளக்கோல விழா

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மாணவாளக் கோல விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. பகல் சங்காபிஷேகமும் மாலை வீதியுலாவும் நடைபெறும். (க-79)

# இராணுவத்தால் தாக்கப்பட்டார் காணாமல் போனவரின் தந்தை

பருத்தித்துறை நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டவரான தும்பளையைச் சேர்ந்த சிகையலங்கரிப்பு நிலையமொன்றில் கடமையாற்றி வந்த கோபி என்பவரின் தந்தையார் இராணுவத்தினரால் தாக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

நேற்று முன்தினம் தனது மகனைக் காணவில்லையென யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துவிட்டு வீடு திரும்பியபோது வல்லைப்பகுதியில் வழிமறித்து விசாரணை செய்த இராணுவத்தினர் இவரைத் தாக்கியுள்ளனர்.

இத்தாக்குதலில் காயமடைந்த முருகையன் கோவில் வீதி பருத்தித்துறையைச் சேர்ந்த கந்தையா சிவபாலசுந்தரம் (வயது 39) என்பவர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இது தொடர்பாக பிரஸ்தாப குடும்பஸ்தரின் மனைவி யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார் எனத் தெரிகிறது. (து-15)

# இராணுவ வாகனப் போக்குவரத்தால் பொதுமக்களுக்கு இடைஞ்சல்

இராணுவ வாகனங்களின் போக்குவரத்திற்காக வீதிக்கடமையில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தால் வீதிகளில் பயணம் செய்யும் பொதுமக்களும் வாகனங்களும் பல மணி நேரம் தடுத்து வைக்கப்படுவது தற்போது வழமையாகியுள்ளது.

இதனால் பொதுமக்கள் அவசர தேவைக்குக் கூட உடனடியாக செல்ல முடியாது பலத்த இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

சிலவேளைகளில் இராணுவத்தின் அறிவுறுத்தலை செவிமடுக்காது செல்லும் பொதுமக்கள் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாவதையும் தினமும் காணக்கூடியதாகவுள்ளது. (து-101)

# நிவாரண விநியோகத்தில் பெரும் முறைகேடாம்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான நிவாரண விநியோகத்தில் பெரும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் பிலீக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த முறைகேடுகளை கண்டறிவதற்கு விசேட திட்டமொன்று வகுத்துள்ளதாகவும் அமைச்சர் கூறுகிறார்.

நடமாடும் சேவை மூலம் கிராமங்களுக்கு சென்று மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கூறும் அமைச்சர்,

முறைகேடாக நடந்துகொண்ட அதிகாரிகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (க-9)

# ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

கலாசார மரபுரிமைகள் அமைச்சினால் வருடா வருடம் நடத்தப்படும் அகில இலங்கை சாகித்திய விழாவின் 2006ஆம் ஆண்டிற்கான சாகித்திய விழா தொடர்பான போட்டிகளுக்கு பாடசாலை மாணவர்களிடமிருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

சிறுவர் கதைகள், சிறுவர் நாடகங்கள், சித்திரக்கதைகள், நாட்டிய நாடகங்கள், சிறுகதைகள் என்பன உள்ளிட்ட பல்வேறு ஆக்கங்களை இவ் போட்டிகளுக்கு அனுப்ப முடியும்.

இதற்கான விண்ணப்பங்களை பாடசாலை அதிபர்களூடாக தத்தமது பிரிவு அரச அதிபர்களுக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மாவட்ட மட்டத்தில் தெரிவுசெய்யப்படும் ஆக்கங்கள் தேசிய மட்டப் போட்டிகளுக்கு சேர்த்துக்கொள்ளப்படும் என கலாசார மரபுரிமைகள் அமைச்சு அறிவித்துள்ளது. (க-9)

# மின் வசதியற்ற நிலையில் 25 வீதமான குடும்பங்கள்

## ஜனாதிபதி மஹிந்த கவலை

(கொழும்பு)

இலங்கையில் வாழும் குடும்பங்களில் 25 வீதமானவை மின்சார வசதியற்ற நிலையிலேயே வாழ்கிறார்கள் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கவலை தெரிவித்துள்ளார்.

நாட்டின் மின்சார தேவை வருடாந்தம் 10 வீதத்தால் அதிகரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 2010ஆம் ஆண்டளவில் மின்சார தேவை 900 மெகாவோற்ஸ்ஸால் அதிகரிக்குமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் கட்டட நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் முகமாக நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அனல்மின் உற்பத்தி நிலையத்தின் அவசியம் இதற்கு முன்னர் நிலவியபோதிலும் அரசியல் மற்றும் குறுகிய குறிக்கோள் முதலிய காரணங்களால் அந்தத் திட்டம் பிற்போடப்பட்டதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் பல மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (து-9)

# புலிகளுக்கு ஆதரவாக செயற்படும் ஊடகங்கள்;

## அமெரிக்காவுக்கான தூதுவர் சாடல்

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக ஊடகங்கள் செய்தி வெளியிடுவதாக அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பெர்னார்ட் ஏ.பி.குணதிலக்க குற்றம் சாட்டியுள்ளார்.

வோசிங்டன் டைம்ஸ் நாளிதழுக்கு அளித்த நேர்காணலில் இதுபற்றி அவர் கூறியுள்ளதாவது,

கொழும்பு இராணுவ மருத்துவமனையில் தற்கொலைதாரி மூலம் தாக்குதல் நடத்தி புலிகள் கடைசி முறையாக அரசாங்கத்தை ஆத்திரமூட்டினார்கள்.

இதற்குப் பதிலடி கொடுப்பதற்காக நாட்டினது கடற்படை மற்றும் விமானப்படையினர் திருகோணமலையில் போராளிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்தினார்கள். ஆனால் அரசாங்கம் மீது குற்றம் சாட்டி புலிகளின் கருத்துக்களையே ஊடகங்கள் முழுமையாக வெளியிட்டன. போராளிகள் இனப்படுகொலை என்ற சொற்றொடரைக் கூட பயன்படுத்தினார்கள்.

இராணுவ நடவடிக்கை தொடர்பான போராளிகளின் கருத்தை வெளியிட்ட ஊடகங்கள், கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் கருத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கவில்லை.

விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள் மற்றும் நிலைகள் மீதுதான் தாக்குதல் நடத்தப்பட்டன என்று ஹென்றிக்சன் தெரிவித்திருந்தார். திருமலையில் 10 முதல் 12 பேர் வரையிலானோர் கொல்லப்பட்டனர். அதே எண்ணிக்கையிலானோர்தான் ஏப்ரல் 25ஆம் திகதி கொழும்பு குண்டுத் தாக்குதலிலும் கொல்லப்பட்டனர்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதைத் தவிர்ப்பதற்காக இறுதிநேர காரணங்களை போராளிகள் கூறுகின்றனர்.

இது பயனற்றதுதான். ஆம் ஆனால் இத்தகைய குழுக்களைக் கையாளும்போது மிகப் பொறுமையாக இருக்க வேண்டியுள்ளது. முழு அளவிலான யுத்தத்துக்குச் செல்வதைத் தவிர்க்க அரசாங்கம் விரும்புகிறது. அந்த யுத்தப் பாதையில் மீண்டும் என்றால் அது என்ன விலை என்பதை நாங்கள் அறிவோம். (க)

# எதிர்காலச் சந்ததியைப் பாதுகாக்க ஒன்றிணைவோம்!

## மிலிந்த மொறகொட எம்.பி வேண்டுகோள்

(கொழும்பு)

பயங்கரவாத அச்சுறுத்தலிலிருந்து எதிர்கால சந்ததியைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் அனுதாப பிரேரணை மீதான விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை போன்று ஒரு பௌத்த நாட்டில் இவ்வாறான படுகொலைகளை அனுமதிக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சரின் படுகொலைச் சம்பவத்தின் மூலம் பயங்கரவாதம் பாரிய அளவில் பரவியுள்ளமை தெரிய வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒருங்கிணைய வேண்டுமென்று குறிப்பிட்ட மிலிந்த மொறகொட, அவ்வாறு செய்வதன் மூலம் உலக நாடுகளின் கௌரவத்திற்கு இலங்கை பாத்திரமாகுமென்றும் தெரிவித்துள்ளார். (து-9)

## இன்று ஒரு தகவல்

# பாடகர் பலவகை

ஒருவர் மிகவும் அவசரமாக எங்கேயோ போய்க் கொண்டிருந்தார். "எங்கே சார் இவ்வளவு அவசரம்?" எனறேன். "சபாவுக்குப் போகிறேன் சார். சங்கீதக் கச்சேரி கேட்பதற்கு நேரத்துடன் போனால் தான் முதல் வரிசையில் இடம் கிடைக்கும்" என்றார். "சங்கீதத்தை மிகவும் நனறாக ரசிப்பீர்கள் போலிருக்கிறது" என்றேன். "அப்படி இல்லை சார். நான் சங்கீதத்தை ரசிப்பவன் இல்லை. சங்கீத வித்துவான்களை ரசிப்பவன்" என்றார். "என்ன சார் சொல்கிறீர்கள்?" என்றேன். "சங்கீதம் பாடுபவர்கள் செய்யும் சேட்டைகள் எல்லாம் எனக்கு மிகவும் பிடிக்கும். அதனால்தான் முதல் வரிசையில் உட்கார்ந்து அவர்களின் முகத்தை அருகிலிருந்து பார்த்து ரசிக்கிறேன்" என்றார்.

இப்படியும் சில ரசிகர்கள் நம்மில் உண்டு. அப்படிப்பட்ட ரசிகர்களுக்கான தகவல் இது. இதைத் தெரிந்து கொண்டால் அவர்கள் இன்னும் கொஞ்சம் விபரமாக அனுபவித்து ரசிக்கலாம்.

பாடும்போது சேட்டை செய்யும் வித்துவான்களில் மொத்தம் 24வகை உண்டென்று சொல்கிறது சங்கீத சாஸ்திரம். அது எப்படி தெரியுமா? சில பேர் பாடும்போது பல்லைக் கடித்துக்கொண்டு பாடுவார்கள். அவர்களுக்கு ஸந்தஷ்டர் என்று பெயர். ரஸபேதமாக இரைபவர்களுக்கு உத்குஷ்டர் என்று பெயர். சில விததுவான்கள் எப்படி தெரியுமா? பாடும்போது அடிக்கடி ஸுஸு என்று சத்தம் வரும்... இப்படி ஒலியெழுப்புவர்களுக்கு ஸுத்காரி என்று பெயர். சிலர் பயந்து கொண்டே பாடுவார்கள். இப்படிப் பயத்துடன் பாடுபவர்களுக்கு பீதரி என்று பெயர்.

சிலர் வேக வேகமாகப் பாடுவார்கள். இவர்களுக்குச் சங்கீதர் என்று பெயர். சிலர் பாடும்போது வாயைப் பயங்கரமாகத் திறந்துகொண்டு பாடுவார்கள். இவர்கள் கராளி என்னும் வகையைச் சேர்ந்தவர்கள். ஸ்வரங்களை சுருதிக்கு அதிகமாகவோ குறைவாகவோ பாடுபவர்களுக்கு விகலர் என்று பெயர். சிலர் பாடுகிறேன் என்று சொல்லிக்கொண்டு காகம் மாதிரி கத்துவார்கள். அதாவது காகம் மாதிரி கடூரமான குரல் உள்ளவர்கள். இவர்களுக்குக் காகீ என்று பெயர். தாளத்துடன் ஒத்துப் போகாமல்... தாளம் தப்பிப் பாடுபவர் விதாளர்.

கழுத்தை மேலே தூக்கிப் பாடுபவர்களுக்கு கரபர் என்று பெயர். ஆடு மாதிரி கழுத்தை வைத்துக் கொண்டு பாடுபவர்கள் உத்வடர். சிலர் பாடும்போது நெற்றி, முகம், கழுத்து இங்கெல்லாம் நரம்புகள் புடைக்கும்... இப்படி பாடுபவர்கள் ஜோம்பகர். பாடும்போது சுரைக்குடுக்கை மாதிரி கழுத்தை வைத்துக் கொள்பவர்கள் உண்டு. அவர்களுக்கு தும்பகீ என்று பெயர். கழுத்கை கோணிக் கொண்டு பாடுபவர் வக்ரீ.

கைகளை அடிக்கடி நீட்டி நீட்டி பாடுபவர் ப்ரஸாரி. கண்களை மூடிக்கொண்டு பாடுபவர் நமீலகர். ரஸங்களுக்கு ஒவ்வாமல் பாடுபவர் விரஸர். தவிர்க்க வேண்டிய ஸ்வரங்களைப் பிடித்துப் பாடுபவர் அபஸ்வரர். தழுதழுத்த குரலோடு சொற்களை தெளிவற்ற முறையில் உச்சரிப்பவர் அவ்யத்கர். உச்சஸ்தாயி போன்ற மூன்று ஸ்தானங்களையும் எட்ட இயலாதவர் ஸ்தானப்ரஷ்டர். ஸ்தானங்களை கட்டுப்பாடில்லாமல் பாடுபவர் அவ்யவஸ்திதர்.

ஒன்றோடு மற்ற ராகங்களைக் கலந்து அடிப்பவர் மிச்ரகர். மேல்ஸ்தாயிகளில் அஜாக்கிரதையாக சஞ்சரிப்பவர் நிர்முக்தர். மூக்கால் பாடுபவர் ஸானு நாசிகர். ஆக இப்படி 24வகைப் பாடகர்கள் உண்டென்று சங்கீத சாஸ்திரம் சொல்கிறது.

சங்கீதத்தை ரசிக்கத் தெரியாத நமது ஆட்கள் இந்த விபரங்களை மனதில் வைத்துக்கொண்டு போனால்... சங்கீதவித்துவான்களையாவது ரசித்து விட்டு வரலாம்.

நானும் என்னுடைய நண்பர் ஒருவரும் ஒரு கச்சேரிக்குப் போனோம். நண்பர் சொன்னார். "இப்போது பாடப் போகும் வித்துவான்... பாடினால் நாள் முழுவதும் கேட்டுக் கொண்டிருக்கலாம்" என்றார். "அவ்வளவு நன்றாகப் பாடுவாரா?" என்றேன். "அப்படி இல்லை... பாட ஆரம்பித்தால் அவ்வளவு கெதியாக முடிக்க மாட்டார்... அதனால் அப்படிச் சொன்னேன்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அகலத்திரையில் படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

அகலத்திரையில் ரமண மகரிஷியின் நேரடி தரிசனம், சாயி பாபாவின் 14வது அற்புத லீலைகள், கைலாச தரிசனம் உள்ளடங்கலாக 2மணி நேர படக்காட்சி இன்று காலை 9.00மணி முதல் இராமநாதன் வீதியில் உள்ள சத்திய சாயிசேவா நிலையத்தில் காண்பிக்கப்படும்.பிரவேசம்இலவசம். (கு)

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சமஷ்டி முறையே மருந்து

## ஜனாதிபதிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி கடிதம்

"ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் எந்தவொரு தீர்வையும் நியாயமானதொன்று என ஐரோப்பிய யூனியன் ஏற்றுக்கொள் ளுமென நீங்கள் எதிர்பார்க்க முடியாது. ஒன்றிணைந்த இலங்கையைப் பிரிப்பதை வன்மையாக எதிர்ப்பவர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் ஒஸ்லோ உடன்படிக்கைக்கமைய சமஷ்டி அடிப்படையில் தீர்வொன்றைக் காண்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளது. சமஷ்டிக்கு எதிரான, ஒற்றையாட்சிக்கு எதிரான கருத்துக்கொண்டவர்களைக் கூடத் திருப்திப்படுத்தும் வகையில் இந்திய அமைப்பு முறையை கைக்கொள்ள வேண்டுமென நான் வற்புறுத்த விரும்புகிறேன்."

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் வீ.ஆனந்தசங்கரி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எழுதிய 7.5.2006திகதியிட்ட கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களால் பெருமளவில் ஏற்றுக்கொள்ளப்படும் திட்டமாகவும் இது காணப்படுகிறது. புத்த பிக்குகள் பிரிவினையை எதிர்த்தாலும் இந்த விதமான தீர்வை ஏற்றுக்கொள்வார்கள். ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சிக்கு அளிக்கப்பட்ட வாக்குகள் எல்லாவற்றையும் எனக்கு எதிராக அளிக்கப்பட்ட வாக்குகளெனக் கருதமுடியாது" என ஜனாதிபதித் தேர்தல் முடிவு வெளிவந்த போது தாங்கள் தெரிவித்த கருத்தை ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

ஐ.தே.கட்சி வேட்பாளருக்கு அளிக்கப்பட்ட வாக்குகளில் 49.7 வீதமானவை சமஷ்டி அடிப்படையிலான தீர்வுக்கு ஆதரவாக அமைக்கப்பட்டனவாகும்.

இடதுசாரிக் கட்சியினரும் சமஷ்டி அடிப் படையிலான தீர்வுக்கு ஆதரவானவர்களே இவை அனைத்துக்கும் மேலாக தாங்கள் பிரதமராக இருந்த காலத்தில் கடந்த ஆண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தலைமையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மகாநாட்டில் இனப் பிரச்சினைக்கு சமஷ்டி ஆட்சிமுறையே தீர்வாகுமென தீர்மான மொன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது என அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (து)

## இந்திய கடற்படையினருடன் திருமலை சென்ற படையினர்

(திருகோணமலை)

வடமராட்சி கிழக்கில் கடற்பயிற்சியில் ஈடுபட்ட விடுதலைப் புலிகள் மீது கடற்படையினர் மேற்கொண்ட வலிந்து தாக்கும் நடவடிக்கை கடற்புலிகளால் நேற்று முன்தினம் முறியடிக்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை மேற்படி தாக்குதலின் போது, கடற்புலிகளால் சுற்றிவளைக்கப்பட்ட பேர்ள் குறூஸ் எனும் துருப்புக் காவியிலிருந்த 700பேரும் பாதுகாப்போடு திருமலை சென்றடைந்துள்ளனர்.

மேற்படி தாக்குதலை அடுத்து இலங்கை படைத்துறைச் செயலகத்தினால் கடற்சமரை முறியடிக்க இந்திய கடற்படையினரின் உதவி நாடப்பட்ட பொழுதும் இதற்கு இந்திய கடற்படையினர் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்தியக் கடற்படையினர் சர்வதேச கடற்பரப்பிற்குள் வந்தால் மட்டுமே தம்மால் பாதுகாப்பு வழங்க முடியும் என வலியுறுத்தினர். இதனையடுத்து 700பேருடன் சர்வதேச கடற்பரப்பிற்கு நகர்ந்த பேர்ள் குறூஸ் எனும் துருப்புக்காவி கடற்கலம் பின்னர் இந்திய கடற்படையினரின் உதவியோடு திருமலை சென்றடைந்துள் ளது. (கு)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் மரணம்

(திருகோணமலை)

திருகோணமலை மூதூர் பாலநகர் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் பலியாகியுள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை 10.15மணிக்கு சிகை அலங்கார நிலையத்துள் புகுந்த இருவர் இவரை சுட்டுவிட்டு மோட்டார் உந்துருளியில் தப்பிச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மரணமானவர் சிகை அலங்கார நிலையத்தின் உரிமையாளர் சூரியா என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்த துப்பாக்கி சூட்டுச் சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து கட்டைபறிச்சான் இராணுவ முகாம் 100 மீற்றருக்கு அப்பால் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு-9)

## எம்.பியின் அலுவலகம் சுற்றிவளைப்பு

நேற்றுக்காலை 9மணியளவில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் யாழ்ப்பாண அலுவலகம் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இத் தேடுதலையடுத்து, அவரது அலுவலகத்துக்கு அயலில் உள்ள வீடுகளும் தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டன. (து-15)

## கனடாவில் தமிழர் எழுச்சியின் உச்சம்

## வேண்டுகோள் அட்டைகளால் நிறையும் அரசியற் தலைமை அலுவலகங்கள்!

கனேடியத்தமிழர் பேரவையினால் நடாத்தப்பட்டுவரும் தமிழர் ஒற்றுமை வாரத்தின் அங்கமாக கனேடிய அரசியற் தலைமைக்கு சமாதானத்தை வலியுறுத்தி வேண்டுகோள் அட்டைகளை அனுப்பும் பணியில் தமிழ் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழர் வியாபார நிலையங்கள், தமிழர் சேவை நிலையங்கள் என்பனவற்றில் இவ் வேண்டுகோள் வைக்கப்பட்டு இருப்பதுடன் கனேடியத் தமிழர் பேரவையின் செயற்பாட்டாளர்களினால் அவ் வேண்டுகோள் அட்டைகள் ஒவ்வொரு தமிழர் வீட்டுக்கும் கொண்டு வரப்படுவதாகவும், ஏராளமான தமிழர்கள் தத்தம் வேண்டுகோள்களை கனேடிய அரசியற் தலைமைகளுக்கு அனுப்பி வருவதாகவும் கனேடியத் தமிழர் பேரவை அறிவித்துள்ளது.

இதேவேளை, தமிழர் ஒற்றுமை வாரத்தின் தொடர்ச்சியாக நடைபெறும் நிகழ்வுகளில் மக்கள் பேரெழுச்சியுடன் கலந்து கொள்ளுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (கு)

## வெற்றிலைக்கேணி கடற்சமரில் வீரச்சாவடைந்த போராளிகள்

(கிளிநொச்சி)

நேற்று முன்தினம் வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடற் புலிகள் மீது கடற்படை மேற்கொண்ட தாக்குதலில் இரு பெண் போராளிகள் உட்பட நான்கு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

அம் மாவீரர்களின் பெயர் விபரம் வருமாறு,

லெப்டினன்ட் கேணல் சஞ்சனா அல்லது புலிச்செல்வி என்று அழைக்கப்படும் ஜெனித்தா புஸ்பராஜா, லெப்டினன்ட் கேணல் அன்பு என அழைக்கப்படும் அமுத சுமணா நாகேஸ்வரன், லெப்டினன்ட் கேணல் கவியழகி என அழைக்கப்படும் சாந்தினி பேதுருப்பிள்ளை, மேஜர் மலர்நிலவன் என அழைக்கப்படும் ஜேசுராஜா சாந்தன் வீரச்சாவை அணைத்துக் கொண்ட இம் மாவீரர்களிற்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை செலுத்துகின்றனர். (கு)

## மலேசிய சந்தையில் பெண் ஏலத்தில் விற்பனை

(வியட்நாம்)

மலேசிய சந்தையில் வியட்நாம் நாட்டைச் சேர்ந்த ஒரு இளம் பெண் ஏலத்தில் விற்கப்பட்டதாக வெளிவந்த செய்திகளையடுத்து வியட்நாம் நாட்டில் மலேசிய நாட்டுக்கு எதிராக போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

சுமார் 20வயது மதிக்கத்தக்க வியட்நாம் நாட்டைச் சேர்ந்த குறித்த பெண் கடந்த வாரம் மலேசிய சென்றதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் குறித்த பெண் தன்னிடம் பணம் ஏதும் இல்லாமையால் தன்னை விற்பதற்கு முன்வந்துள்ளதாக அறிவிக்கப் பட்டிருந்தது.

இதனைக் கேள்வியுற்ற அறு பது வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர், அறுபது ஆயிரம் டொலர் கொடுத்து அந்தப் பெண்ணை வாங்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (கு-5)

## பொதுக்கூட்டம் நடத்த நடவடிக்கை

(பருத்தித்துறை)

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டத்தை நடாத்துவதற்கான நடவடிக்கைகளைச் சங்கச் செயலாளர் என்.மகேந்திரன் மேற்கொண்டுள்ளார்.

இச் சங்கத்தின் அங்கத்தவர்கள் புலோலி கிராமக் கோட்டடியில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள சங்க அலுவலகத்திற்கு நேரில் சமுகமளித்தோ, அல்லது தபால் மூலமோ தமது தற்போதைய முகவரி, அங்கத்தவர் இலக்கம் என்பனவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (கு-52)

## வதந்தியால் மக்கள் குழப்பம்


பி.ப 2.00மணியுடன் வர்த்தக நிலையங்களை மூடுமாறு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டதாகப் பரவிய வதந்திகளையடுத்து வடமராட்சிப் பகுதியில் பி.ப 1.30 மணியுடன் அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு பிரதான வீதிகள் அனைத்தும் வெறிச்சோடிக் காணப்படுகிறது.

மக்கள் நடமாட்டம் அற்ற நகரவீதிகளில் இராணுவத்தினரின் நடமாட்டத்தை மட்டுமே காணக்கூடியதாகவிருக்கிறது. (து-101)

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை



### எல்லை தாண்டி 40

அதன் பிறகு சகாராவைத் தாண்டி மாவிக்கும் கினிக்கும் போயினர். கினிக்குப் புறப்பட்ட விமானம் பேருந்து மாதிரி இருந்தது. விமானத்திற்குள் கட்டவிழ்ந்த சில கோழிகள் ஓடிக் கொண்டிருந்தன. ஓரிரு பெண்கள், வேர்க்கடலை சிற்றுண்டி விற்றுக் கொண்டிருந்த னர். அது மக்களின் விமானமாகத் தென்பட்டது. அதற்கடுத்து சியரா, லியோனுக்குப் போனார். அப்பொழுது நாடாளுமன்றக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. அங்கிருந்த அலுவலரிடம் தான் தலைவர் லுதுலியின் பிரதிநிதியாக வந்திருப்பதாகச் சொன்னார். அலுவலர் அவைத் தலைவரிடம் லுதுலி வந்திருப்பதாகச் சொல்லிவிட்டார். அவைத் தலைவருக்கு அருகில் நாற்காலியைப் போட்டு உட்கார வைத்து விட்டனர். கூட்டம் முடிந்தவுடன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரிசை வரிசையாக நின்று கைகுலுக்கினர். லுதுலி என நினைத்துக் கொண்டு, மண்டேலாவுக்குச் சங்கடமாகப் போய்விட்டது. விஷயம் தெரிந்தால் ஆள்மாறாட்டம் என்றல்லவா செய்தி பரவும். இறுதியில் அவைத் தலைவரிடம் தான் லுதுலியின் பிரதிநிதி நெல்சன். லுதுலி அல்ல என்பதை விளக்கினார். ‘‘லுதுலியின் பிரதிநிதிக்கு லுதுலிக்குத் தருகிற மரியாதை தர வேண்டுமல்லவா...’’ என்று அவர் சொன்ன பிறகுதான் இயல்பான மூச்சு விட்டார் மண்டேலா. லுதுலி, ஆபிரிக்காவில் மகாத்மா காந்தியாகக் கருதப்பட்டு மதிக்கப்பட்டவர். அங்கும் உதவி கிடைத்தது.

அதற்கடுத்து லைபீரியாவுக்குப் போய் தலைவர் டப்மன்னைச் சந்தித்தார். அவர் பயிற்சி தர ஒப்புக் கொண்டதோடு, ஆயுதம் வாங்கிக் கொள்ள ஐயாயிரம் பவுனையும் தந்தவர். கைச் செலவுகளுக்குப் பணம் வாங்கிக் கொள்க என்றும் கூறினார். ஒரு கையில் நானூறு டாலர் பணமும் வந்து சேர்ந்தது.

இதையடுத்தது கானா போய்ச் சேர்ந்தனர். அங்கு ஆலிவர் வந்து சேர்ந்தார். கினீயில் சிகுதோரேயைச் சந்திக்காமல் போனதை அந் நாட்டுத் தூதுவரிடம் சொன்ன போது, மீண்டும் கினீக்குப் போக ஏற்பாடு செய்தார். அங்கு தோரேயைச் சந்தித்துப் பேசி விட்டு உதவி கேட்டனர். அவர் பதில் ஏதும் சொல்லாமல் தான் எழுதிய இரு புத்தகங்களைக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார். தன்நாடும் தன் நாட்டு மக்களும் சுதந்திரப் போராட்டத்தை ஆதரிப்பதாகக் கூறி அனுப்பிவிட்டார்.

பணம், ஆயுதம், பயிற்சி ஏதும் பேசக் காணோம். சிறிது ஏமாற்றம் தான். ஆனால், விடுதி அறைக்கு வந்தபோது ஒரு பெட்டி நிறைய நோட்டுக் கத்தை வந்து இருந்தது. அதைப் பார்த்த ஆலிவர், அது அந்த நாட்டு ரூபாய் நோட்டு ஆதலால், வெளியில் செல்லாது எனக் கூறி கவலைப்பட்டவர், அதை செக் நாட்டுத் தூதுவரகத்தில் கொடுத்து பவுனாக மாற்றிக் கொண்டு வந்தார்.

அதற்கடுத்து செனேகல் போனார்கள். இங்கு இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், வெள்ளையர்கள், வேறு நிறத்தவர் சமமாகப் பழகி வாழ்ந்து வந்தது தெரிந்தது. ஆலிவர் ஆஸ்துமாவால் சங்கடப்பட்டார். அவரைத் தூக்கிக் கொண்டு போக வேண்டி இருந்தது. லியோபால்டு செங்கார் தான் அந் நாட்டின் தலைவர். அவர் ஆலிவருக்கு சிகிச்சைக்கு ஏற்பாடு செய்ய முன்வந்தார். செங்கார், அல்ஜீரியாவில் பிரஞ்சுப் படைகளுடன் ஒத்துழைத்தவர் என்றும், ஆகவே அவரிடம் எச்சரிக்கையுடன் நடக்கும்படி கூறப்பட்டு இருந்தது. அவரிடம் உதவி கேட்ட போது, தன் கை கட்டப்பட்டிருப்பதாகக் கூறிவிட்டார். மறுநாள் லண்டனுக்குப் போவதற்கு டிக்கட் மட்டும் வாங்கிக் கொடுத்த தோடு அரசு மரியாதையுள்ள பாஸ்போட்டும் வழங்கினார்.

### லண்டனில்

படித்தது பூராவும், இங்கிலாந்தைப் பற்றியும், லண்டனைப் பற்றியும் தானே! உலகை அடக்கி ஆண்ட தலைநகரம் ஆயிற்றே. ஜனநாயக ஆட்சி முறைக்கும் வித்திட்ட நாடாமே! எனவே கனவுகள் பல பக்கிங்காம் அரண்மனை, நாடாளுமன்றக் கட்டடம், பிக்பென் தேம்ஸ் நதி, இப்படிப் பல பார்க்க வேண்டியவையாகத் தோன்றின.

ஆலிவரின் மனைவியும், குழந்தைகளும் இங்கு இருந்ததால் அவர்களையும் பார்க்க ஆசை. ஆபிரிக்க இந்தியக் காங்கிரஸின் தலைவர் யூசுப்டாடும் லண்டனில் இருந்தார்.

லண்டனில் மண்டேலா இருப்பது தெரிந்ததால், தென்னாபிரிக்க அரசு எளிதாக அவரைப் பிடித்து விடமுடியும். எனவே தலைமறைவாகவே நடந்துகொண்டார். தொழிலாளர் கட்சி, லிபரல் கட்சித் தலைவர்களையும் ரகசியமாகச் சந்தித்தார். எங்கு போனாலும், குறிப்பாக ஆபிரிக்கத் தலைவர்கள், கம்யூனிஸ்டுகளுடனும், வெள்ளையருடனும் வைத்துள்ள உறவு பற்றியே கேள்விகளைக் கேட்டுத் துளைத்தனர். எனவே யூசுப் டாடுவைச் சந்தித்தபோது, இதை மண்டேலா விளக்க முற்பட்டபோது, ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் அறிவிக்கப்பட்ட கொள்கையிலிருந்து வழி விலகுவதாக டாடு குற்றம் சாட்டினார். இது கொள்கை மாற்றம் அல்ல. போராட்ட உத்தியை மட்டுமே மாற்றவிருக்கிறோம் என்று கூறியதை டாடு ஏற்கவில்லை.

கம்யூனிஸ்டுகளுடன், இந்தியர்களுடன், வெள்ளையருடன் உறவு நீடிக்கும். ஆனால் காங்கிரஸின் தனித் தன்மை, தலைமை இருக்கவேண்டும். இது அவசியம் என மண்டேலா விளக்கியதையும் டாடு ஒப்புக் கொள்ளவில்லை. சிந்திக்குமாறு வேண்டிவிட்டு மண்டேலா விடை பெற்றார்.

அங்கிருந்து அடிஸ் அபாவக்குப் புறப்பட்டார். இராணுவப் பயிற்சி பெறத்தான் அடுத்த ஆறு மாதம் காலை எட்டு முதல் ஒரு மணிவரை மீண்டும் இரண்டு முதல் நான்கு மணி வரை நான்கு முதல் இரவு வரை இராணுவம் பற்றிய பாடம்.

ஆயுதங்களைக் கையாள, பதுங்க, வெடிகுண்டு வைக்க, கனத்த ஆயுதத்துடன் நெடுந்தூரம் தண்ணீர், உணவின்றி ஓடிச் சேர சிரமமான, வாட்டியெடுத்த பயிற்சி தான். இராணுவப் பயிற்சி, அரசியல் கட்சி வேலை செய்வது மாதிரி அல்ல. மன உறுதியும், உடல் வலிமையும் தேவை. அது மண்டேலாவிடம் உபரியாக இருந்தது.

கர்னல் டாடசே, பாடம் கற்பிக்கிற போது இது முதலாளித்துவப் படை அல்ல. இது மக்களின் நேசப் படை. எனவே நமது அணுகுமுறை வித்தியாசப்பட வேண்டும். இராணுவப் பயிற்சி, கடமையில் ஈடுபடும்போது, முதலாளித்துவ இராணுவக் கட்டுப்பாடு, அதிகாரம், பணிவு தேவை.

அது முடிந்த மறு நிமிடம் பதவி பட்டம் பாராமல், மனிதர்களாக சகோதரர்களாக மாறிவிட வேண்டும். இல்லையேல் சுதந்திரப் போராட்டப் படையும் கூட, கொள்ளைக் கூட்டமாகிவிடும் எச்சரிக்கை என்பார்.

விடைபெற்ற அன்று ஒரு ஆட்டோ மெடிக் பிஸ்டலையும் இருநூறு பவுண்டு ரவைகளையும் பரிசாக டாடசே கொடுத்தார். அன்புப் பரிசுதான். நல்ல கனத்த சுமை!

கார்ட்டுமில் விடுதி அறைக்குப் போன போது, முன்னிடத்தில் பல வெள்ளையர் இருந்தனர். மண்டேலா பெட்டியில் பல ஆயிரம் பவுனும், பிஸ்டலும், ரவைகளும் இருந்தன. எனவே யாராவது பார்த்து விட்டால் என்ற பயம் மண்டேலாவுக்கு இருந்தது. (தொடரும்)

# தமிழ்ச் சிறுவர்களை பௌத்த பிக்குகளாக்க கடும் முயற்சி

(கொழும்பு)

தமிழ்ச் சிறுவர்களை பௌத்த பிக்குகளாக்கும் நடவடிக்கை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட வேளை, சமய நிறுவனங்களும் தமிழ் ஊடகங்களும் அதற்கு கடும் எதிர்ப்பைக் காட்டியமையால் இடையில் மௌனமாக இருந்த மத மாற்று குழுவினர் தற்போது மீண்டும் மாற்று வழியைக் கடைப்பிடித்து தமிழ்ச் சிறுவர்களை பிக்குகளாக்க முயற்சிக்கின்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் மாணவர்களை இந்தியாவிற்கு அழைத்துச் சென்று அங்கு பௌத்த பிக்குகளாக்குவதே இந்த மாற்றுவழித் திட்டமாகும்.

இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள அரச சார்பற்ற நிறுவனமொன்றில் கடமையாற்றும் தமிழர் ஒருவர் அண்மையில் இந்தியா சென்று வந்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

முன்னர் பதுளைப் பகுதியிலிருந்து குருநாகல் பகுதிக்கு பௌத்த பிக்குகளாக்க மலையகச் சிறுவர்கள் அழைத்துவரப்பட்டு பின்னர் அவர்கள் மீட்கப்பட்டு பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டமையும் சில தமிழ்ச் சிறுவர்கள் பிக்குகளாக்கப்பட்டு தம்புள்ள பகுதியில் விசாரணைகளில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஏழ்மை நிலையிலுள்ள தமிழ்க் குடும்பங்களில் உள்ள ஆண் பிள்ளைகளைக் குறி வைத்து இக் குழுவினர் செயற்படுவதாகவும் அதிக பணத்தை செலவு செய்து தங்கள் இலக்கை இவர்கள் அடைய முனைவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# கொக்கிளாய் பிரதேசத்திலிருந்து 246 குடும்பங்கள் இடம்பெயர்வு!

வட-கிழக்கில் நிலவும் யுத்த சூழ்நிலை காரணமாக கொக்கிளாய் பிரதேசத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்த 246 குடும்பங்களைச் சேர்ந்த 954பேர் நீர்கொழும்புக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்த மீனவக் குடும்பங்கள் நீர்கொழும்பிலிருந்து மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்காக கொக்கிளாய் பிரதேசத்துக்குச் சென்று அங்கு நீண்டகாலமாக நிரந்தரமாக வசிப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த 246 குடும்பங்களில் 686 பெரியவர்களும் 12 வயதுக்குக் குறைந்த 268பேரும் உள்ளனர். இந்தக் குடும்பங்களில் 26 குடும்பங்கள் தூவ கனிஷ்ட வித்தியாலயத்திலும், 27 குடும்பங்கள் கடற்கரை தெருவிலுள்ள இடைத்தங்கல் முகாமிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஏனைய குடும்பங்கள் உறவினர் தெரிந்தவர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கான உணவுப் பொருட்களை நீர்கொழும்பு பிரதேச செயலாளர் வழங்கி வருகின்றார். இதேவேளை மீன்பிடி மற்றும் கடற்றொழில் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா இவர்களைப் பார்வையிட்டு நீர்கொழும்பு ஜா-எல, கப்புவத்த பிரதேசங்களில் தற்காலிகமாக தங்க வைப்பதற்கான நடவடிக் கைகளை மேற் கொள்ளுமாறு அதிகாரிகளைப் பணித்துள்ளார். (க-9)

# புதிய அதிபராகப் பொறுப்பேற்றார்



பருத்தித்துறை மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாலயத்தின் புதிய அதிபராக க.மு.கனகலிங்கம் கல்வித் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுப் பொறுப்பேற்றுள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரையாளராகக் கடமையாற்றிய இவர் கல்வியமைச்சு அகில இலங்கை ரீதியில் ஆசிரியர்களுக்கிடையே நடாத்திய கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்று இந்தியாவுக்குக் கல்விச் சுற்றுலா சென்று அங்கு கல்வி அனுபவங்களைப் பெற்று வந்தவர்.

பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நல்லாசிரியராகவும் பணியாற்றியவர்.

கல்வித் திணைக்களம் நடாத்திய நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டே இவர் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (து-52)

# உலோகப் பொருட்களின் ஏற்றுமதிக்கு 6 மாத கால தடை

(கொழும்பு)

உலோகப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு 6மாத கால தடையை விதிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி இரும்பு, பித்தளை, அலுமினியம் மற்றும் செம்பு ஆகிய உலோகப் பொருட்களை மூலப் பொருட்களாக ஏற்றுமதி செய்வதற்கு 6மாத காலத்திற்கு முற்றாக தடைவிதிக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் குமாரவெல்கம தெரிவித்துள்ளார்.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரமும் கிடைக்கப் பெற்றுள்ளது. மூலப் பொருட்களாக குறிப்பிடப்பட்ட உலோகப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுவதினால் அந்தத் துறைசார்ந்த உற்பத்தியாளர்கள் நெருக்கடி நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

இந்த நடவடிக்கையை கட்டுப்படுத்த பித்தளை ஏற்றுமதிக்கு 50 வீத ஏற்றுமதி வரி அறவிடப்பட்ட போதிலும் அது வெற்றியளிக்கவில்லை. இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளுக்கு பித்தளை கூடுதலான அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இதனால் அந்த துறை சார்ந்த சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் தங்கள் தொழிலை மேற்கொள்ள முடியாத இக்கட்டான நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

இதனால் இப் புதிய தடை சட்டத்திற்கு ஏற்ப குறிப்பிட்ட உலோகங்களினால் தயாரிக்கப்பட்ட பொருட்களையே ஏற்றுமதி செய்ய முடியுமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

# இராணுவச் சிப்பாய் காயம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை ஊரிக்காட்டில் நேற்றுமுன்தினம் பிற்பகல் நடத்தப்பட்ட கைக் குண்டுத் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

இத்தாக்குதலையடுத்து இராணுவத்தினர் சுற்றிவளைப்புத் தேடுதலில் ஈடுபட்டனர். (து-15)

# அமெரிக்காவுடன் பேசத்தயார் ஈரான் அதிபர் அறிவிப்பு

(ஜகார்த்தா)

ஈரான் மின்சாரத் தேவைக்காக அணு சக்தி தயாரிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள் ளது. அணு ஆயுதம் தயாரிக்கத்தான் அணு சக்தியைப் பயன்படுத்த ஈரான் முனைந் துள்ளது என்று சந்தேகிக்கும் அமெரிக்கா, ஐரோப்பியா நாடுகளுடன் சேர்ந்து அங்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

அணுசக்தி திட்டத்துக்காக யுரேனி யத்தை செறிவூட்டும் பணியை ஈரான் கைவிட வேண் டும். இல்லாவிட்டா அதன் மீது பொருளா தாரத்தடை விதிக்க ஐ.நா.பாதுகாப்பு கவுன் சிலில் தீர்மானம் கொண்டுவரு வோம் என்று அமெரிக்கா மிரட்டி வருகிறது.

இந்த நிலையில் ஈரான் அதிபர் அகம தினிஜாத் இந்தோனேஷிய டி.விக்கு அளித்த பேட்டியில்,

ஐ.நா.வின் தடை குறித்து நாங்கள் கவலைப்படவில்லை. ஈரான் தனிமைப் படுத்தப்பட்டால், அதனால் ஈரானுக்கு ஏற் படுகிற பாதிப்பைவிட, அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் தான் மிகப்பெரிய பாதிப்பு ஏற்படும்.

நாங்கள் எந்த நாட்டையும் சார்ந்து இல்லை. சர்வதேச ரீதியாக தனிமைப்ப டுத் தப்பட்டால் எங்கள் அணு விஞ்ஞானிகள், அணு ஆராயச்சியில் தீவிரமாக ஈடுபடுவார் கள். இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண் பதற்காக அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருக்கிறோம்.

இஸ்ரேலைத் தவிர வேறு எந்த நாட்டோ டும் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருக்கிறோம். பேச்சுவார்த்தைக்கு தயா ராக இருக்கும்போது யாராவது எங்களை மிரட்ட நினைத்தால், பேச்சுவார்த்தை கடின மாகிவிடும். என்று கூறியிருக்கிறார். (க)

WORLD NEWS
உலக தரிசனம்

# இத்தாலியின் புதிய அதிபராக நப்போலிடானோ தெரிவு

(ரோம்)

இத்தாலியில் நடந்த அதிபர் தேர்தலில் முன்னாள் கம்யூனிஸ்ட் தலைவர் ஜார் ஜியா நப்போலிடானோ புதிய அதிபராக தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார்.

இத்தாலியில் நடந்த அதிபர் தேர்தல் முடிவு நேற்று முன்தினம் அறிவிக்கப்பட் டது. இத்தாலி பாராளுமன்றத்தில் மொத் தமுள்ள 1099 உறுப்பினர்களில் பிரதமர் புரோடியின் ஆதரவு பெற்ற ஜார்ஜியா நப் போலிடானோ 543 உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவுடன் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

எண்பது வயதாகும் அதிபர் ஜார்ஜியா நப்போலிடானோ தற்போதைய பிரதமர் ரோமனோ புரோடியின் ஆதரவு பெற்ற வர். இத்தாலியின் முதல் கம்யூனிஸ்ட் அதிபர் என்ற பெருமையை ஜார்ஜியா பெறுகிறார். இவர் நாட்டில் நிலவி வந்த கருத்து வேறு பாடுகளைக் களைந்து மக்களை ஒற்று மையுடன் வாழவைக்க கடந்த 10 ஆண்டு களாகப் பாடுபட்டவர்.

ஜார்ஜியா வெற்றிகுறித்து பிரதமர் புரோடி நிருபர்களிடம் கூறுகையில், புதிய அதிபராக தேர்வு செய்யப்பட்டிருக்கும் ஜார் ஜியா வரும் 24ஆம் திகதி பதவி ஏற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது முன் னாள் அதிபர்கார்லோ அஜிக்லியோ சியாம்ப அனைத்து பொறுப்புகளையும் ஜார்ஜியா விடம் ஒப்படைப்பார் என்றார். (து)



கசகஸ்தான் நாட்டு தலைநகர் பிஸ்கெக்கில் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டக்காரர்களுக்கும் அரசு ஊழியர்களுக்குமிடையே மோதல் வெடித்தது.

# குண்டு மனிதனின் 4830 கி.மீ.நடைப் பயணம்

(நியூயோர்க்)

அமெரிக்காவைச் சேர்ந்த 186கிலோ எடைகொண்ட ஒருவர் 4830கிலோ மீற்றர் தூரம் நடந்து ஓர் ஆண்டில் அமெரிக்காவைச் சுற்றிவந்தார்.

அமெரிக்காவைச் சேர்ந்தவர் வாஹ்ட் (40) கடந்த ஆண்டு இவரது எடை 186 கிலோ மேலும் 15ஆண்டுகளுக்குமுன் இவர் வாகனத்தை ஒட்டிச் செல்லும்போது ஏற்பட்ட விபத்தில் பாத சாரிகள் இருவர் இறந்துவிட் ட னர். இதில் இவருக்கு மன அழுத்தம் ஏற் பட்டது.

இதனால் மன நிம்மதிக்காகவும் தனது எடையைக் குறைக்கவும் அமெரிக்காவை நடைபயணம் மூலம் சுற்றிவர முடிவு செய் தார். இதையடுத்து கடந்த ஆண்டு ஏப்ரல் 10ஆம் திகதி தனது நடைப்பயணத்தை கலி போர்னியாவில் தொடங்கினார். 4830 கிலோமீற்றர் நடந்து தனது பயணத்தை நியூ யோர்க் நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை நிறைவுசெய்தார். ஓர் ஆண்டு நடந்ததன் மூலம் அவரது எடை 45கிலோ குறைந் துள்ளது. நடைப் பயணத்தின் போது கூடா ரங்கள், சாலையோர உணவு விடுதிகள் ஆகியவற்றில் தூங்கினார். அவரது பயணத் தின்போது சாப்பிட்ட உணவின் அளவையோ தினமும் நடந்த தூரத்தையோ அவர் கணக் கிடவில்லை.

இதுகுறித்து வாஹ்ட் கூறுகையில், எனது பயணத்தின் நோக்கம் எடையைக் குறைப்பது மட்டுமல்ல எனது செயல்பாடு களை மாற்றுவதும் தான். கலிபோர்னியா வில் இருந்து நியூயோர்க் நகரை அடைந் தது வாழ்க்கையின் ஒரு பகுதி மட்டுமே என்றார். மேலும் அவர் கூறுகையில், நடைப்பயணத்தின் போது நேரம் காலம் திகதி தூரம் ஆகியவற்றைப் பற்றி நினைக் கவில்லை என்றார்.

அவர்தனது பயண முன்னேற்றம் குறித்து வெப்சைட் ஒன்றில் குறிப்பிட்டிருந்தார். அதில் அவரது ஆதர வாளர்களாக பல்வேறு நபர்களின் பெயரைக்குறிப்பிட்டுள்ளார். அவரது நடைபயணம் குறும்படம் எடுப்ப வர்களை வெகுவாக கவர்ந்துள்ளது. (க)

# கொழும்பு - கட்டுநாயக்க இடையே கட்டண நெடுஞ்சாலை அமைப்பு

(கொழும்பு)

கொழும்புக்கும் சர்வதேச விமான நிலை யம் அமைந்துள்ள கட்டுநாயக்கவுக்கும் இடையே இலங்கையில் முதலாவது கட்டண நெடுஞ்சாலை அமைக்கப்படவுள்ளது.

கொழும்பில் அமைச்சரவை முடிவுகள் குறித்த கடந்த புதன்கிழமையன்று ஊடக வியலாளர்களிடம் அமைச்சர் அனுர பிரிய தர்சன யாப்பா கூறியதாவது,

இலங்கையின் முதலாவது கட்டண நெடுஞ்சாலையானது கொழும்பு நகருக் கும் கட்டுநாயக்க விமான நிலையத்துக் கும் இடையே அமைக்கப்படவுள்ளது. மொத் தம் 25.6கிலோ மீற்றர் நீளம் வரை அமைக் கப்படவுள்ள இந்த நெடுஞ்சாலையானது 39 மாதங்களில் உருவாக்கப்படும்.

உந்துருளிகளில் செல்வோருக்கும் ஒரு குறிப்பிட்ட கட்டணம் வசூலிக்கப்படும் இக்கட்டணமானது நெடுஞ்சாலையின் பரா மரிப்புக்கானது. இந்த நெடுஞ்சாலை சீனா வின் 292 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியுடன்உருவாக்கப்படுகிறது. கொழும் பிலிருந்து பெலியகொடவரை ஆறுவழிப் பாதையாகவும் பெலியகொடவிலிருந்து கட்டு நாயக்கவரை நான்கு வழிப்பாதையாகவும் இது அமைக்கப்படும். (க)

# பொது நோக்கு மண்டபம் திறப்பு



(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வு கழக அனுசரணை யுடன் வடக்கு-கிழக்கு சமுதாய மீளக் கட்ட மைப்புத் திட்டத்திற்கமைவான வேலைத் திட்டத்தின் கீழ், கிளிநொச்சி மாவட்டத்தி லுள்ள எள்ளுக்காடு கிராமத்தில் பொது நோக்கு மண்டபம் ஒன்று அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

பொதுநோக்கு மண்டபத்துக்கான பெயர்ப் பலகையினை தமிழர் புனர்வாழ் வுக்கழக வடக்கு- கிழக்கு சமுதாய மீளக் கட்டமைப்புத் திட்டப்பணிப்பாளர் சுடர் திரை நீக்கம் செய்துவைத்தார்.

பொதுநோக்கு மண்டபத்தினை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிளிநொச்சி மாவட்டப் பணிப்பாளர் செ.சீசரும், சமூ கப்பொருளாதார அபிவித்திச்சங்கக் கட்ட டத்தினை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் யாழ்.மாவட்ட பணிப்பாளர் ஜெயராஜும், நூலகக் கட்டடத்தினை திருமதி வை.வைத் தீஸ்வர மூர்த்தியும், கிராம சேவையாளர் அலுவலக வளாகத்தினை எள்ளுக்காடு கிராம சேவையாளர் மரியநாயகமும் திறந்துவைத்தனர். (க)

# அகாசி சொல்ஹெய்மை வெளியேற்ற கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான நோர்வே மற்றும் ஜப்பானிய சிறப்புப் பிரதி நிதிகளான எரிக்சொல்ஹெய்ம் அகாசி ஆகி யோர் இலங்கையை விட்டு வெளியேற வேண்டும் என்று ஸ்பர் என்ற சிறிலங்கா அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அவுஸ்திரேலியாவை தளமாகக்கொண்டு இயங்கும் சிறிலங்காவின் ஐக்கிய அமைதி மற்றும் மனித உரிமைகளுக்கான சமூகம் என்ற ஸ்பர் அமைப்பு இதுகுறித்து வெளி யிட்டுள்ள அறிக்கையில்,

ஜப்பான் மற்றும் நோர்வே சிறப்புப் பிரதிநிதிகளை இலங்கை அமைதி முயற் சிகளிலிருந்து வெளியேற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அகாசியை அப்பொறுப்பிலி ருந்து விடுவிக்க ஜப்பானிய அரசாங்கத் துக்கு இலங்கை அரசாங்கம் வேண்டு கோள் விடுக்கவேண்டும்.

விடுதலைப்புலிகளின் அழுத்தங்களால் யுத்தநிறுத்த ஒப்பந்த மீறல் குறித்து தவறான தரவுகளை அகாசி தெரிவித்துள்ளார். அமைதி முயற்சிகளில் கடந்த காலங்களில் இருவரது செயற்பாடுகளும் தோல்வியடைந்திருக்கின்றன.

இத்தகைய தோல்வியைத் தழுவுகிற இராஜதந்திரிகளுக்கு இலங்கை அரசாங் கம் சிவப்புக் கம்பளம் விரிக்கக்கூடாது. இவர்களுக்காக தொகையையும் செலவி டக்கூடாது. அரச படையினர் மற்றும் பொது மக்கள் மீதான தாக்குதல்களை தமிழீழ விடுதலைப்புலிகள் உடனடியாக நிறுத்தா விட்டால் யுத்த நிறுத்த ஒப்பந்தத் திலிருந்து அரசாங்கம் விலிகிக்கொள்ள வேண்டும் என்று ஸ்பர் அமைப்பின் அந்த அறிக்கை யில் மேலும் கூறப்பட்டுள்ளது. (க)

## மின்தடையால் மாணவர்கள் சிரமம்

யாழ்.நகர்ப்பகுதியில் கடந்த சில தினங் களாக அடிக்கடி மின்சாரம் தடைப்படுகிறது. குறிப்பாக இரவு நேரங்களில் 7 மணி முதல் 9 மணிவரை மின்சாரம் தடைப்படுகிறது. இதனால் எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்ப மாகவுள்ள க.பொ.த. உயர்தரப்பரீட் சைக்கு தோற்றும் மாணவர்கள் மிகுந்த சிரமங்க ளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

எனவே க.பொ.த.உயர்தரப்பரீட்சை முடி வடையும் வரையாவது சீரான முறையில் மின்சாரத்தை விநியோகிக்குமாறு பரீட் சைக்குத் தோற்றும் மாணவர்கள் சம்பந் தப்பட்ட அதிகாரியை கோருகின்றனர். (க)

# கழுத்து வெட்டப்பட்ட நிலையில் காணப்பட்ட சடலம்

ஊரிக்காடு, காரைநகரைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ராசன் சாந்தகுமார் (வயது 26) என்ப வரின் சடலம் கழுத்து வெட்டப்பட்ட நிலை யில் உயர் பாதுகாப்பு வலயத்தைச் சேர்ந்த காரைநகர் தோப்புக்காட்டில் பொது மக் களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சீவல் தொழிலாளியான இவரது சடலம் கழுத்து வெட்டப்பட்டு மண்ணில் புதைக் கப்பட்ட நிலையில் நேற்று மாலை 5 மணியளவில் பொது மக்களால் காணப் பட்டு அப்பகுதி கிராம சேவையாளருக்கு அறிவிக்கப்பட்டது. கிராம சேவையாளர் இதனை ஊர்காவற்றுறை பொலிஸாருக் குத் தெரியப்படுத்தியதையடுத்து, அவ் விடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத் தைக் கைப்பற்றி யாழ்.போதனா வைத்தி யசாலையில் ஒப்படைத்துள்ளார்கள். (து-15)

பிறரை ஏமாற்றுபவன் அதிகம் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கின்றான்.

-அப்துர் றஹீம்

வலம்புரி

# மகிந்தவின் பயணம் பாதை மாறுகின்றதா?

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தராஜபக்ஷ ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்தபோது இந்த நாட்டில் இனிமேல் சமாதானத்திற்கு இடமே இல்லை எனப் பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் எல்லாம் மகிந்த ராஜபக்ஷவைசென்றடைந்ததோ இல்லையோ, அதனால் அந்தக்கருத்தை அவரிடம் சிலர் நேரில் தெரிவித்துள்ளனர்.

தாங்கள் ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்தால் அது நாட்டின் சமாதான உருவாக்கத்திற்கு வேட்டாகும். எனவே ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமயவுடனான கூட்டை தவிர்த்துக் கொள்ளுங்கள் எனக்கூறினர்.

சமாதானத்தின் மீது பற்றுக் கொண்டவர்கள் கூறிய கருத்தை மகிந்த ராஜபக்ஷ தட்டிவிட வில்லை.

அதற்குப் பதிலாக ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர வேண்டிய நிலையில் நான் இருக்கிறேன். என்னை சந்திரிகா அம்மையார் கடுமையாக எதிர்க்கிறார்.

ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்வதை விட நான் வேறு என்னதான் செய்யமுடியும். எனினும் உங்களுக்கு ஓர் உறுதி மொழியை தரமுடியும். அது என்னவெனில் ஜனாதிபதித்தேர்தலில் நான் வெற்றி பெற்றதும் ஜே.வி.பியின் பாட்டுக்கெல்லாம் தாளம் போடமாட்டேன். சமாதானம் தான் எனது இலட்சியம் என்று கூறினார்.

ஆனால் தான் கூறியதை அவர் நடைமுறைப் படுத்தினாரா என்பதே இப்போதுள்ள கேள்வி.

நான் ஜனாதிபதியானதும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை நேரில் சந்திப்பேன் எனப் பகிரங்கமாகக்கூறிய மகிந்த ராஜபக்ஷ அது பற்றி ஏதேனும் சிந்தித்தாரா?

தலைவர் பிரபாகரனைச் சந்தித்து அவருடன் சமாதானம் பற்றிப் பேசுவேன் எனக்கூறிய மகிந்த இப்போது தான் கூறியதை மறந்துவிட்டார்.

ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றுவதற்காக பொய்யான உத்தரவாதத்தை கொடுப்பதும் அவற்றை மக்கள் நம்பி ஏமாறுவதும் நல்லாட்சிக்கான இலட்சணம் அல்ல.

எனவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சமாதானத்தையேற்படுத்துவதற்கான தனது ஆர்வத்தை வெளிப் படுத்த வேண்டும். அதனை அமுல்படுத்துவதற்காக தான் கூறியதைச் செய்தாக வேண்டும். ஒரு நாட்டின் பொறுப்புவாய்ந்த -அதிகார பலமுடைய பதவியில் இருக்கும் ஒருவர் மக்களின் துன்பங்களை தீர்ப்பதற்கான செயற்பாடுகளில் ஈடுபடவில்லையாயின் அல்லது அவர் நேர்மையுடன் நடக்கவில்லையாயின் அதனால் ஏற்படும் நிலைமை மிக மோசமானதாகவே இருக்கும்.

மிக நீண்ட காலமாக யுத்தத்தால் பாதிப்படைந்து வாழ்க்கையின் அனுபவிப்புக்களை தொலைத்து விட்டு இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளவும் குடியிருக்க அனுமதிக்க வேண்டும்.

இதற்காக உயர் பாதுகாப்பு வலயங்களை இல்லாமல் செய்வது ஜனாதிபதியின் முதற்பணியாகும். இவ்வாறு செய்வதன் ஊடாக ஒரு சுமுகமான நிலை ஏற்படும். அதிலேயே சமாதானத்திற்கு வழிதிறந்து விடும்.

ஆகவே ஜனாதிபதி ராஜபக்ஷ இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க காத்திரமான நடவடிக்கையை பற்றுறுதியோடு செய்தாகவேண்டும். இல்லையேல் அவரின் பயணப்பாதை மாறிச்செல்கிறதென்பதே பொருளாகும்.

# கடமையைச் சரியாகச் செய்யாமல் எம்.பிக்கள் வாளாதிருப்பது ஏன்?

## அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவரின் காட்டமான கேள்வி

(கொழும்பு)

"கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்திலே அவசர காலச் சட்டம் எந்தவிதமான எதிர்ப்புமின்றி வாக்கெடுப்புக்கு விடப்படாமல் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட செய்தியை ஊடகங்கள் வாயிலாக அறிந்து மிகவும் வேதனைப்பட்டேன். அத் தருணத்தில் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் அவையில் இருக்கவில்லையா" இவ்வாறு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயமூர்த்தி 'தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓர் உருக்கமான வேண்டுகோள்' என்ற தலைப்பில் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்திருக்கிறார்.

"அவசரகாலச் சட்டம் எந்த நோக்கத்துக்காகக் கொண்டு வரப்பட்டது என்பது ஒருபுறமிருக்க அது தமிழர்களுக்கு எதிராகவே பாவிக்கப்படுகிறது என்பதே உண்மை. அண்மையில் கொழும்பில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டமைக்கும் இதுவே காரணம். நெஞ்சை நெருடுகின்ற ஈனத்தனமான நிலைக்கும் அரச படைகளின் குரூரமான செயற்பாடுகளுக்கும் இந்த அவசரகாலச் சட்டமே வழி வகுத்துள்ளது.

மலையகத்தில் நட்சத்திரங்களாக விளங்கும் பாராளுமன்ற உறுப்பினர்களாக ஆறுமுகம் தொண்டமான், சந்திரசேகரன் ஆகியோர் கூட இடந்த அவசரகாலச் சட்டத்தை எதிர்த்துப் பேசாமலும் எதிர்த்து வாக்களிக்காமலும் இருந்துள்ளார்கள். அண்மையில் இவ்விருவரும் "அனைத்துத் தமிழர்களும் ஒன்றுபட வேண்டும்" எனக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

தமிழர்களுக்கு எதிராக, படுமோசமாகப் பாவிக்கப்படும் இந்த அவசரகாலச் சட்ட நீடிப்புக்காகப் பாராளுமன்றத்தில் அங்கீகாரம் வேண்டப்படுமிடத்து அதனை எதிர்த்துப் பேசி அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் அதற்கு எதிராக வாக்களித்து தமிழர்களுடைய எதிர்ப்பைக் காட்டியிருக்க வேண்டும். இப்படிச் செய்யத் தவறுமிடத்து இலங்கையிலே அவசரகாலச் சட்டம் பாராளுமன்றத்தில் எவ்வித எதிர்ப்புமின்றி தமிழர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்படுகின்றது என்றும் தவறான எண்ணத்தையே சர்வதேச ரீதியில் ஏற்படுத்தும்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் என்ற வகையிலும், இக் கொடிய சட்டத்தால் துன்புறுத்தப்படும் அப்பாவிகளின் துன்பங்களை நேரில் காணும் சட்டத்தரணி என்ற வகையிலும், இனிமேலாவது அவசரகாலச் சட்டம் விவாதத்துக்கு வரும் பொழுது அதனை எதிர்த்துப் பேசி, வாக்கெடுப்புக்கு விடச் செய்து எதிர்த்து வாக்களித்து தமிழர் எதிர்ப்பினை வெளிக்காட்ட வேண்டுமென அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் மன்றாட்டமாகவும் உருக்கமாகவும் கேட்டுக் கொள்கிறேன்" என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (து)

# ஈழத் தமிழர்களுக்கான ஆதரவுப் போக்கு தமிழகத்தில் தொடர்ந்து நீடிக்குமா?

தமிழகத்தில் ஆட்சி மாற்றத்துக்கு தமிழக மக்கள் தீர்ப்பு வழங்கி விட்டார்கள். இதுவரை, முதலமைச்சர் பதவியில் இருந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவி செல்வி ஜெயலலிதா தமிழக சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமரப்போகின்றார்.

இதுவரை சட்டசபையில் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்து கொண்டு சட்ட சபைக்குள் பிரசன்னம் கொடுக்காமலேயே தமது எம்.எல்.ஏ.பதவியை தக்கவைத்து வந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு.கருணாநிதி முதல்வராவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது. எனவே, இனிமேல் சட்டமன்றத்துக்கு இம்முறை ஆட்சி மாற்றம் முக்கிய திருப்புமுனை ஒன்றுடன் வந்திருப்பதும் கவனிக்கத்தக்கது.

கடந்த சுமார் நாற்பது ஆண்டு காலமாக தமிழகம் இரண்டு பெரிய திராவிடக் கட்சிகளினதும் கோட்டையாகத் தொடர்ந்து விளங்கி வந்திருக்கின்றது. தி.மு.கவோ அல்லது அ.தி.மு.க.வோ ஏதோ ஒரு திரா விடக் கட்சிதான் கடந்த நான்கு தசாப்த காலமாக தமிழக மாநில ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டிருந்து வந் துள்ளது.

இம்முறை அ.தி.மு.கவிடமிருந்து தி.மு.க.வுக்கு ஆட்சியதிகாரம் மாறுகிறது. ஆனால், ஒரு முக்கிய பிரதான வித்தியாசம் இம்முறை உள்ளது.

இதுவரை காலமும் கடந்த நாற் பது ஆண்டுகளாக ஏதோ ஒரு திராவிடக் கட்சி தனித்து அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்து வந்துள்ளது.

எனினும், இம்முறை திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான ஜனநாயக முற்போக்குக் கூட்டணி வெற்றி பெற்று அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுள்ள போதும், அக்கூட்டணியின் பிரதான கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் தனித்து அறுதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை.

ஆட்சியைத் தக்க வைத்து நீடிப்பதற்கு தனது கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுகளிலும், ஒத்துழைப்பிலும் தங்கியிருக்க வேண்டிய இக்கட்டு தி.மு.கவுக்கு.

புதுடில்லியில் மத்தியில் ஆட்சி அமைத்திருக்கும் காங்கிரஸ் கட்சியின் ஆட்சிக் குடுமி தி.மு.க போன்ற கூட்டணிக் கட்சிகளின் கைகளில் என்றால், அதுபோலவே, மாநிலத்தில் ஆட்சி அமைக்கப்போகின்ற தி.மு.கவின் ஆட்சிக் குடுமியும் அதன் கூட்டணிக கட்சிகளான காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி போன்றவற்றின் கைகளில்...

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள இந்த ஆட்சி மாற்றம் ஈழத் தமிழரின் இனப்பிரச்சினை விடயத்தில் எத்தகைய தாக்கத்தை, பிரதிபலிப்புக்களை ஏற்படுத்தும் என்பதை இவ்வாறு தனித்துப் பெரும்பான்மையை எக்கட்சியும் பெறாத நிலையில் கூட்டணிக் கட்சியின் தயவில் தங்கி நிற்கும்கூட்டமைப்பின் பிரதான கட்சிகளிடம் மத்திய, மாநில அரசுகளின் அதிகாரம் சென்றிருக்கும் நிலைமையின் ஊடாகவே நாம் நோக்க வேண்டும்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான சமாதான முயற்சிகள் "கிணற்றில் போட்ட கல்லாக" தேக்கமடைந்திருக்கும் இன்றைய சூழலில் அந்த முயற்சிகளை முன்நகர்த்துவதில் அனுசரணைத் தரப்பான நோர்வேயின் பங்கு பயனேதும் தராமல் சிக்கலடைந்திருக்கும் இந்த நிலையில் இப் பிராந்தியத்தின் வல்லாதிக்க நாடான இந்தியாவின் ஆக்கபூர்வமான பங்களிப்பு ஏதேனும் அமைதி முயற்சிகளின் அசைவுக்கு வழி சமைக்காதா என்ற ஆர்வமும் தேடுதலும் சர்வதேச சமூகத்தின் கருத்தில் எழுந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் அயலக மாநிலமான தமிழ் நாட்டில் இந்த ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருப்பது முக்கிய விடயமாகின்றது.

ஈழத் தமிழர்களின் ஏக அதிகாரபூர்வ பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் அடக்கி, ஒடுக்கி, அழிப்பதற்காக இந்தியாவுடன் பாதுகாப்பு கூட்டு ஒப்பந்தம், இலங்கைப் படையினருக்கு இந்தியாவில் தேர்ந்த இராணுவப் பயிற்சி போன்ற தனக்குச் சார்பான உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு தென்னிலங்கை சிங்கள அரசுத் தரப்பு ஆலாய்ப் பறந்து கொண்டிருக்கும் முக்கியமான கால கட்டத்தில் தமிழகத்தில் இந்த ஆட்சி மாற்றம் நேர்ந்திருக்கின்றது.

மத்திய அரசில் காங்கிரஸுடன் கூட்டுச்சேர்ந்து, 13 அமைச்சுப் பொறுப்புக்களைத்தம் வசம் வைத்தபடி, ஈழத் தமிழர் விவகாரத்தில் மத்திய அரசு வழி தவறி நடந்து விடாமல் இதுவரை பார்த்துக் கொண்ட தமிழ் நாட்டின் கூட்டணிக் கட்சிகளே இப்போது தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பேற்பதால் அதே பொறுப்புணர்வோடு ஈழத்தமிழரின் நலனுக்குக் குந்தகமாக இந்திய மத்திய மற்றும் தமிழக மாநில அரசுகள் நடந்து கொள்ளாமல் தொடர்ந்தும் பார்த்துக்கொள்ளும் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம். (க)

# புலிகளுக்கு அ.அட்டை தயாரித்த சிங்கள வர்த்தகர் சிக்கினார்?

(கொழும்பு)

வடக்கு–கிழக்குப் பகுதிகளிலிருந்து தென்னிலங்கை செல்லும் விடுதலைப் புலிகளுக்கு போலி அடையாள அட்டைகளை பெற்றுக் கொடுப்பவரும் தகவல்களை வழங்குபவரும் வர்த்தகருமான சிங்கள இளைஞர் ஒருவரை ராகம–ஹொறப்பே பகுதியில் வைத்து அண்மையில் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ராகம–ஹொறப்பேயில் வசிக்கும் மேற்படி சந்தேக நபர் பமுனுகம பகுதியில் தனியார் தொலைபேசி நிலையமொன்றை நடத்திவருகிறார். இவர் விடுதலைப் புலிகளுக்கு தேவையான தகவல்களை வழங்கி வருவதுடன் அவர்களுக்கு வடக்கு- கிழக்குப் பகுதிகளிலிருந்து கொழும்பு சென்று வரக்கூடிய வகையில் போலி அடையாள அட்டைகளை வழங்கி வருபவர் என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகளுக்காக மேற்படி சந்தேக நபரான வர்த்தகருக்கு புலிகள் பல ஆயிரம் ரூபாக்களை வழங்கி வருவதாக தகவல்கள் பொலிஸாருக்குக் கிடைத்துள்ளன.

கடந்த காலங்களில் இவ் வர்த்தகரை சந்திப்பதற்காக விடுதலைப் புலி உறுப்பினர்களும் புலனாய்வுப் பிரிவினர்களும் வந்து சென்றதாக தகவல்கள் தெரியவந்துள்ளதாகவும் அந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். (க)

## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்



இறைவனை நாம் போற்றிப் பாடுவோம். இதயம் நிறைந்த பக்தியுடன் அவருடைய திருநாமத்துடன் ஒன்றியிருப்போம். எப்போதும் ஜபம் செய்தபடியே இருப்போம். பிறகு நமது துயரமனைத்தும தீரும். முக்தியை நோக்கி மகிழ்ச்சியுடன் நடைபோடுவோம்.

சுவாமி விவேகானந்தர்

# நகரை அண்டிய பகுதிகளில் இராணுவம் தீவிர சோதனை

யாழ்.நகரை அண்டிய பிறவுண் வீதி , நாவலர் வீதி ,கஸ்தூரியார் வீதி போன்ற பகுதிகளில் உள்ள வீடுகளில் இராணுவமும் பொலிஸாரும் இணைந்து பாரிய தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் கலட்டிச் சந்தியில் வைத்து ஆறு இளைஞர்கள் இராணுவத்திரால் கைதுசெய்யப்பட்டதையடுத்து இத்தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

வீடுகளுக்குச் சென்ற இராணுவத்தினர் அங்கிருந்த இளைஞர்களை தனியே அழைத்துச் சென்று விசாரணைகளுக்கு உட்படுத்தினர். இதேவேளை படிவங்களை விநியோகிக்கும் இராணுவத்தினர் அவற்றை பூரணப்படுத்தி பெற்றுச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

திடீரென வீடுகளுக்குச் சென்று தேடுதல் மேற்கொள்ளப்பட்டு வருவதால் மக்கள் பீதியில் உறைந்துள்ளனர். (ச-132,133)

## ஒரு வாரத்தைத்...

நிறுவனங்கள் கடைகள் என்பன திறக்கப்படுகின்ற போதிலும் அவை நேர காலத்துடன் மூடப்படுவதால் மாலை வேளைகளில் நகரப் பகுதிகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

இதேவேளை இராணுவ வன்முறைகள் தொடர்வதால் மறு அறிவித்தல் வரை பணிப்புறக்கணிப்புத் தொடருமென தமிழ்த்தேசிய தொழிற்சங்கக் கூட்டமைப்பு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-05)

## துருப்புக்காவி...

மதத்தினருக்கு புனித தினமான வெசாக்கிற்கு முதற் தினம் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் நாட்டில் ஒரு எதிர்விளைவைத் தூண்டி விடுவதற்கு விடுதலைப்புலிகளால் எடுக்கப்பட்ட மற்றுமொரு முயற்சி எனவும் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ச-05)



அச்சுவேலியில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்ட சிகை அலங்கரிப்பாளர். (படம்- சதீஸ்)

# கண்காணிப்புக்குழுவின் அறிக்கை...

பேச்சுக்கு வந்தனர்.

இரண்டு தரப்பையும் இரு தரப்பாக நோர்வே அனுசரணையாளர்கள் அங்கீகரித்துத்தான் இந்த ஒப்பந்தம் கொண்டுவரப்பட்டது. சமாதான முயற்சிகள் நடைபெற்றன. இந்த நிலையில்தான் அரசாங்கமும் பேச்சுவார்த்தைகளுக்கு முன்வந்தது.

இதை தகர்க்கும் வகையில் பலவீனப்படுத்தும் வகையில் கண்காணிப்புக்குழுவினர் நேற்று வெளியிட்ட அறிக்கையை மிகவும் பாரதூரமான விடயமாகத்தான் எமது தலைமைப்பீடம் கருதுகிறது.

எங்கள் மக்கள் கூட கொதித்துப் போயுள்ளனர். எங்கள் மக்கள் பாரிய தியாகங்கள் செய்துதான் எமது விடுதலைப்போராட்டம் இந்த உயர் நிலையை அடைந்திருக்கிறோம்.

அப்படியான எங்களது உரிமைப்போராட்டத்தை கொச்சைப்படுத்தும் வகையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கண்காணிப்புக்குழு அறிக்கை பாரதூரமானது என்றும் உடனடியாக அவர்கள் பதில் தரவேண்டுமென்றும் அவர்களிடம் நாம் கேட்டிருக்கின்றோம்.

தமிழர் தாயகத்தை இராணுவம் முற்றாக ஆக்கிரமித்து எமது தாயகத்தை அழிக்கின்ற முயற்சிகளை மேற்கொண்டது. அந்த நிலையில் எங்களுடைய மக்களும் விடுதலை அமைப்பும் எமது தலைவரின் தலைமைக்கு பின்னால் அணிதிரண்டு போராடி பல்லாயிரக்கணக்கான படைகள் நிலைகொண்ட நிலையிலும் 70 விழுக்காடு அளவிலான எமது நிலப்பிரதேசத்தை மீட்டெடுத்தோம்.

நாங்கள் இராணுவ வெற்றிகளைப் பெற்று ஒரு நடைமுறை அரசையே இயக்குகின்ற வலிமையைப் பெற்ற பின்னர் தான் அரசாங்கமே இரு தரப்பு என்றும் படை வலுச்சமநிலை என்றும் அங்கீகரித்துக் கொண்டுதான் பேச்சுவார்த்தைக்கு முன்வந்தது.

இதனது அடிப்படையில் தான் இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தம் உருவானது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கூட எங்கேயும் அரசு என்றும் எம்மை ஒரு ஆயுதக்குழு என்றோ அல்லது வேறு சொற்பதங்களிலோ குறிப்பிடப்படவில்லை. இரு தரப்புக்கள் என்பதுதான் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறை.

இந்த நடைமுறையின் கீழ்த்தான் பேச்சுவார்த்தைகளும் பல கட்டங்களாக நடைபெற்றன. இதைச் சீர்குலைக்கும் வகையிலும் கொச்சைப்படுத்தும் வகையிலும் பலவீனப்படுத்தும் வகையிலும் எந்தவிதமான அறிக்கையையும் வெளியிடுவதற்கு கண்காணிப்புக்குழுவிற்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை என்பதை நாங்கள் இன்று கண்காணிப்புக்குழுத்தலைவருக்கு சுட்டிக்காட்டினோம்.

எந்த அடிப்படையில் இந்தப் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டன என்ற வரலாற்றையும் கூட விரிவாக இன்று கண்காணிப்புக்குழுத்தலைவருக்கு விளக்கினோம்.

*இராணுவத்திற்கு வழித்துணை*

இராணுவத்தினரது போக்குவரத்திற்கு கண்காணிப்புக்குழு வழித்துணை வழங்குவது பாரதூரமான தவறு என்று இன்றைய சந்திப்பில் தெரிவித்தோம். மேலும் எமது போராளிகளுக்கும் எமது போராளிகளின் போக்குவரத்துக்களுக்கும் கண்காணிப்புக்குழு வழித்துணை வழங்கியதா என்றும் நாம் கேள்வி எழுப்பியபோது பதில் கூற இயலாமல் அவர் இருந்தார்.

கண்காணிப்புக்குழு என்பது இருதரப்பையும் சமதரப்பாக ஏற்றுக்கொண்டு யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் உள்ள விடயங்களின் அடிப்படையில் செயல்படுவதற்குத்தான் கண்காணிப்புக்குழுவிற்கு அங்கீகாரம் உள்ளது.

அதை மீறி கண்காணிப்புக்குழு செயற்படமுடியாது. அதைவிடுத்து சிறிலங்கா கடற்படையினரது படகில் ஏறி விடுமுறையில் செல்கின்ற படையினருக்கு பாதுகாப்பும் வழித்துணையும் வழங்குவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாது.

ஏனெனில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மறுக்கப்பட்ட நிலையில் சிறிலங்கா படைத்தரப்பிற்கு அப்படியான ஒரு பாதுகாப்பை கண்காணிப்புக்குழு வழங்குவதை ஏற்க முடியாது என்று தெரிவித்தோம்.

எங்களுடைய போராளிகள், தளபதிகள் தென்தமிழீழத்தில் இருந்து வட தமிழீழத்திற்கு எங்களுடைய கடல்கலங்களில் போக்குவரத்துக்கள் மேற்கொள்கின்றனர். ஆகையால் உங்களது கடற்கண்காணிப்பு அதிகாரிகளை உடனடியாக வழித்துணை வழங்கவும் பாதுகாப்பு வழங்கவும் அனுப்புங்கள். இதை உடனே செய்யவேண்டும்.

அரச தரப்பினருக்கு இத்தகைய ஏற்பாட்டைச்செய்யும் நீங்கள் தமிழீழ விடுதல்லைப் புலிகளுக்கும் செய்தாக வேண்டும். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் இருதரப்பினரையும் சமமாகப்பாவிப்பதுதான் கண்காணிப்புக்குழுவினது பணிகள் அமையவேண்டும் என்றும் கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் கூறினோம்.

எமது மக்களை படுகொலை செய்கின்ற படையினருக்கு பாதுகாப்பையும் வழித்துணையையும் நீங்கள் வழங்குகின்றீர்கள். வான் பரப்பில் இருந்து எமது மக்கள் மீது குண்டு வீச்சுப் பொழிகிறது. ஆட்லறித் தாக்குதல்களையும் மேற்கொள்கின்றனர்.

கடற்படைக்கப்பல்களில் இருந்து பீரங்கித் தாக்குதலை மேற்கொள்கின்றனர். இதைத் தடுக்க ஏன் கண்காணிப்புக்குழு முயலவில்லை என்றும் அவரிடம் கேட்டோம்.

*குண்டு வீச்சுக்கள் யுத்த நிறுத்த மீறலாக தெரியவில்லையா?.*

கடலில் நடந்த சம்பவத்திற்கு உடனே அறிக்கை வெளியிட்டுள்ள கண்காணிப்புக் குழுவிற்கு திருகோணமலையில் எங்கள் மக்கள் குடியிருப்புக்கள் மீதும் வன்னியிலும் குண்டு வீச்சை நடத்துவது உங்களுக்கு யுத்தநிறுத்த மீறலாக தெரியவில்லையா? என்று நாம் கேட்டோம்.

எங்களால் அழிக்கப்பட்டு இயங்க முடியாமல் இருந்த குண்டு வீச்சு விமானங்கள் இன்று எங்கள் மக்கள் மீது குண்டுகளை வீசிக்கொண்டிருக்கின்றன. நான்கு ஆண்டு கால சமாதான காலத்தைப் பயன்படுத்தி தங்களது படைகளை கட்டியெழுப்பி எங்களது மக்களை படுகொலை செய்வதற்கு முழு நடவடிக்கைகளையும் முடுக்கிவிட்டிருக்கிறார்கள்.

இதனால் நாங்கள் நிச்சயமாக மிக விரைவில் ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம். இதை சர்வதேச சமூகத்திற்கும் தெரியப்படுத்துவோம். எங்கள் மக்களும் ஒரு தீர்மானத்திற்கு வருகின்ற நிலைமையில் விடுதலைப்புலிகளின் தீலைமையும் ஒரு நல்ல தீர்மானத்தை -இறுக்கமான நிலைப்பாட்டை மேற்கொள்ளும்.

அனுசரணையாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருக்கிறோம். மிக விரைவில் அவர்களுடனான சந்திப்பை மேற்கொள்ளவுள்ளோம். வேறு வழிகளின் ஊடாக எங்களது அதிருப்திகளை ,அதிர்ச்சிகளை அனுசரணையாளர்களுக்கு தொடர்ச்சியாக தெரிவித்து வருகிறோம்.

எங்கள் மக்களையும் எங்கள் குரல் வளையையும் அழுத்திப்பிடித்துக் கொண்டு பேசுங்கள்... பேசுங்கள்... என்று சர்வதேச சமூகம் கேட்டுக்கொண்டிருப்பது அர்த்தமற்றது என்று கண்காணிப்புக்குழுவினருக்கு இன்றைய சந்திப்பில் தெரிவித்தோம்.

*போக்குவரத்து வசதி*

எங்களுடைய போக்கு வரத்துக்களை தடுத்துக் கொண்டு அரசாங்கம் தனது போக்வரத்துக்களை செய்ய முடியாது. எங்களுடைய கடற்பிராந்தியத்தில் அவர்கள் சுதந்திரமாக விடுமுறையில் செல்கிறார்கள். அவர்களது கடற்கலங்கள் எல்லாம் சுதந்திரமாக பயிற்சிகளையும் ஒத்திகைகளையும் மேற்கொள்கின்றன.

அப்படியான நிலையில் எமது கடற்படையை நாம் முடக்கிவைத்துக்கொண்டிருக்க முடியாது. எங்களுடை போக்குவரத்துக்கள், பயணங்கள், நடமாட்டங்கள் சுதந்திரமாக நடமாடும் வரை அரச படைகளுக்கும் அதை அனுமதிக்கப்போவதில்லை.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் போக்குவரத்து நடைமுறைகள் மற்றும் சுதந்திரமான நடமாட்டங்கள் தொடர்பாகவும் இரு தரப்பும் சமனானவை என்பது குறித்தும் தெளிவாக எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை இறுக்கமாக நடைமுறைப்படுத்த அனைத்துத் தரப்பினருக்கும் உங்களது அழுத்தங்களை செலுத்துங்கள். சர்வதேச சமூகம் அதைச்செய்யட்டும் அதைவிட்டு விட்டு அறிக்கைகளை விட்டுக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

இத்தகைய அறிக்கைகளை விடுவதற்கு எத்தனையோ அமைப்புக்கள் உள்ளன. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஐ.நா. அமைப்புக்கள் ,மனித உரிமை அமைப்புக்கள் என்று எத்தனையோ அமைப்புக்கள் இத்தகைய அறிக்கைகளை வெளியிடுவதற்கு உள்ளன. அவைகள் அறிக்கைகளை வெளியிடட்டும்.

அரசாங்கத்திற்கு ஒரு மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை முடிந்தால்-அதற்கு அவர்களுக்கு அதிகாரம் இருக்குமேயானால் விடுதலைப்புலிகளுக்கும் அதே அதிகாரம் இருக்கும். இரு சமதரப்பு ,படை வலுச்சம நிலை இரண்டும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் தான் இந்த அமைதி முயற்சிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஆகையால், விடுதலைப்புலிகள் தமது உரிமையை அல்லது நிலைப்பாட்டை நடைமுறைப்படுத்த தயங்கமாட்டார்கள். யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல்கள் என்பதுதொடர்பாக நன்கு ஆராய்ந்து தீர்பளிக்கவேண்டுமென்று கண்காணிப்புக்குழுவிற்கு சுட்டிக்காட்டினோம்.

500முதல் 600 வரையான படையினர் சென்ற கப்பல் அங்கே தவித்துக்கொண்டிருந்தது எங்களுக்குத் தெரியும். கண்காணிப்புக்குழு இருந்தமையால் தான் நாங்கள் ஓரளவு சுய கட்டுப்பாட்டைப் பேணியிருக்கிறோம். எங்களுடைய படையணியினர் தாக்கியழிக்க இயலாமல் இல்லை. ஆனால் சுய கட்டுப்பாட்டோடும் பொறுமையோடும் நாம் இருந்தோம் என்பதை கண்காணிப்புக்குழுவினருக்கு தெரியப்படுத்தியுள்ளோம்.

இத்தகைய பொறுமையைத் தொடர்ந்தும் நீங்கள் எம்மிடம் எதிர்பார்க்க முடியாது என்று கண்காணிப்புக்குழுவிற்கு தெரிவித்துள்ளோம்.

அண்மையில் தென் தமிழீழ தளபதிகள், பொறுப்பாளர்களை வட தமிழீழத்திற்கு எமது கடற் கலத்தில் அழைத்து வந்தபோது கடற்படையினர் குறுக்கறுத்து தாக்க முயன்றனர். அந்த நேரத்தில் எங்களுடைய கடற்படையினர் உக்கிரத்தாக்குதலை நடத்த முயன்ற போது படையினர் பின்வாங்கிக் கொண்டு ஓடிவிட்டனர். எங்களுடைய பயணம் சுமுகமாக முடிவடைந்தது.

கடற்படையினரால் எமது கடற்படையினரை தாக்குப்பிடிக்க முடியாது. இந்த நிலையில் நேற்று எங்களைச் சீண்டி எங்களைத் தடுக்க முயற்சிப்பதும் அவர்கள் சுதந்திரமாக நடமாடவேண்டும் என்பதும் நடைமுறைக்கு ஒவ்வாதது.

ஆகையால் அதற்கு எதிரான நடவடிக்கையை மேற்கொள்ள தள்ளப்பட்டிருக்கிறோம் என்றார் தமிழ்ச்செல்வன். (ச-05)




நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

04.05.2006 முதல்
10.30,2.30,6.30,9.30
மாமனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜக்ஷன்
கிங்கொங்
(KING KONG)
தங்கத்தமிழ் மொழியில். பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 13.05.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.